Registered No. M-4483

Madras War Review { TAMIL 28-1-1944

யுத்த சஞ்சிகை

மலர் IV   1944-ம் ஜனவரி 28உ, வெள்ளிக்கிழமை   இதழ் 21

எதுவும் நம் நோக்கத்தினின்று நம்மை வழுவச் செய்யாது

ஸ்டாலின்கிராட் யுத்தத்தைப் போலவும், அட்லாண்டிக் யுத்தத்தைப் போலவும், ஜெர்மனி யுத்தமும், இந்த யுத்தத்தை முடிவு கட்டக் கூடியதாகும். ஜெர்மன் குடும்பங்களை நாசம் செய்வதிலும், ஜெர்மன் மக்கள் துன்பப் படுவதையுங் கொண்டு நாம் மகிழ்ச்சி யடைய வில்லை; என்றாலும், பிரிட்டிஷ் நகரங்களைத் தாம் அழித்த போது, ஹிட்லரும் கோயரிங்கும் எவ்வளவு மகிழ்ச்சி யடைந்தார்கள் என்பது நமக்கு ஞாபக மிருக்கிறது. பிரிட்டிஷ் பொது மக்கள் எவ்வளவு கடுமையான கொடுமைகளுக்கு ஆளானார்கள் என்ற காட்சியைக் குறித்து, வானொலிப் பிரசங்கங்கள் செய்யும்படி விமான மோட்டிகளை அவர்கள் நியமித்தார்கள். ஜெர்மன் பொது மக்களைக் கொல்ல வேண்டு மென்பது நமது குறிக்கோ ளல்ல.

நமது நோக்க மெல்லாம் ஜெர்மன் யுத்தக் கைத் தொழில்களும், போக்கு வரவு சாதனங்களும் ஸ்தம்பிக்க வேண்டும் என்பது தான். நமது குறிக்கோள்க ளெல்லாம் கோவில்களல்ல; ஆனால், ஜெர்மன் யுத்த கைத் தொழில் ஸ்தாபனங்களும் போக்குவரவு ஸ்தாபனங்களும் தான். நம் நோக்கத்தினின்று எதுவும் நம்மை வழுவச் செய்யாது.

சர் ஆர்ச்சிபால்ட் சிங்க்லேர், விமான மந்திரி, பிளிமௌத் என்னுமிடத்தில் ஜனவரி மாதம் 22-ம் தேதி கூறியது.

பொருளடக்கம்.

	பக்கம்.		பக்கம்.
எதுவும் நம் நோக்கத்தினின்று நம்மைச் வழுவச் செய்யாது	1	உணவுப் பிரச்சினையைத் தீர்க்க அரசாங்க முயற்சி	7
முரசொலி	2	இங்கும் அங்கும்	8
இந்திய வீரரை யழைத்தல்	2	நல்ல காலம் பிறக்குது	9
தலையங்கம் : இத்தாலியப் போர்	3	பார்வையிழந்த படையினருக்குப் பயிற்சிசாலை.	10
போர் முனை நிகழ்ச்சி விளக்கம்	4	சென்னைக்கு இரேக்க செஞ்சிலுவைச் சங்க நன்றி	11
ஜெனரல் டோஜோவின் வாழ்த்துச் செய்தியின் வீழ்ச்சிக் குறிப்பு	5	யுத்த காலத்தில் அரசாங்க உதவி ..	11
சுபேதார் மேஜா போலா சிங்	6	யுத்த நாட் குறிப்புக்கள்	12

முரசொலி

"இத்தாலியை விட்டு ஜெர்மானியர்களை விரட்டி, நேச நாடுகளுக்குப் பரிபூரண உதவி புரிவது தான் எனது அடிப்படையான கொள்கை. இத்தாலிய உள் நாட்டுப் பிரச்சினைகளெல்லாம் அதற்கடுத்தபடித் தான்."

—மார்ஷல் படாக்ளியோ,
ஜனவரி மாதம் 20-ம் தேதி கூறியது.

* * * * * *

"ஜெர்மானியர்களோடு நாம் போராடிக் கொண்டு போகும் முன்னேற்றம் திருப்திகரமாயிருக்கிறது. என்றாலும், சற்று அதிக நேர வேலையும் விசேஷ முயற்சியும் அவசியம். அப்போது தான் குறிப்பிட்டபடி நியாயமான கால அளவிற்குள், போராட்டத்தை நாம் நடத்தி முடிக்கக் கூடும். அடுத்த எதிரியோடு போராடுவதற்கு நம் ஆயுதங்களைக் கைக் கொண்டு விட்டோம். இந்தப் போரிலும் கூடிய சீக்கிரத்தில் முழு மூச்சாகப் போராடுவோம். ஜெர்மானியர்களுடன் போராடுவதனால் நாம் அடையும் அனுபவம், ஜப்பானியர்களோடு போராடுவதற்கு மிகவும் உதவியா யிருக்கும்."

—பீல்ட் மார்ஷல் சர் ஜான்டில்,
கூட்டுத் தலைமை உத்தியோகஸ்தர், டெட்ராய் என்னுமிடத்தில் ஜனவரி 24-ம் தேதி கூறியது.

* * * * * *

என் நாட்டின் நன்மையை விட, என் சொந்த நன்மையை முக்கியமானதாக நான் ஒருபோதும் கருத மாட்டேன். என்னை விட, மேலான தகுதி யுடையவர் எவராவது முன் வந்தால், நான் விலகிக் கொள்ள எப்போதும் ஆயத்தமா யிருக்கிறேன்.

—மார்ஷல் படாக்ளியோ,
இத்தாலிய பிரதம மந்திரி ஜனவரி 20-ம் தேதி கூறியது.

இந்திய வீரரை யழைத்தல்

(எட்டிக்குடி தன்னில்வளர் செட்டிமகனே என்ற சந்தம் மாதிரி.)

1 வேகமாக வாருங்கள் இந்திய வீரரே—நாம்
போகலாம் ஜெர்மனிக் கின்று போர்முன்பாகவே
வெட்கமில்லாக் கிட்லரை
விரட்டியே யடிப்போமினி (வே)

2 தக்கதோர் பிரிட்டிஷ் எட்டாந்தானை யுடனே
சார்ந்திடும் அமெரிக்கர் தாராள முடனே
தப்பாமலே ஜப்பானையும்
இப்போதே யடிப்போமினி (வே)

3 நானிலப் படைகளெல்லாம் நம்மதாச்சுதே—கெட்ட
நாஜிகள் ஒழியுங்காலம் நண்ணிப் போச்சுதே
நாடெலாஞ் செழிக்க நன்மை
கூடலா மெழுந்து நீங்கள் (வே)

4 இந்தியர்க்கும் ஆங்கிலர்க்கும் ஏற்றதே பந்தம்—நம்
இங்கிலீஷ்க்காரர்க்கு வெற்றி யெப்போதும் சொந்தம்
என்றும் ஆங்கிலர் அரசு
வெற்றியுடனே விளங்க (வே)

5 தேகபலத்தோர்கள் யுத்த சேவை செய்குவீர்—
செல்வமுள்ள பேர்கள் நிதி சேர்த்தே யீகுவீர்
தியாகராஜ கீதமிது
நியாய மெனவே வினவி (வே)

யுத்த சஞ்சிகை

வாரா வெளியீடு

மலர் IV | 1944-ம் ஆண்டு ஜனவரி மாதம் 28உ, வெள்ளிக்கிழமை | இதழ் 21

இத்தாலியப் போர்

இத்தாலியின் தலை நகரம் ரோமாபுரி. இதைக் கைப்பற்ற வேண்டுமென்பது தான், தற்போதைக்கு நேச நாடுகளின் நோக்கம். ரோமாபுரியைக் கைப்பற்றினால், இத்தாலியைக் கைப்பற்றியது போலத் தான். எனவே தான், ஜெர்மனியர்கள் ரோமாபுரியைக் காக்க அரும்பாடு படுகிறார்கள். ரோமாபுரியை யடுத்துள்ள பகுதிகள் தற்காப்புப் போராட்டத்திற்கு மிகவும் ஏற்றவை. போதாக் குறைக்கு மழை அதிகம். அதனால் நேச நாட்டுப் படைகள் முன்னேறிப் போவதற்கும் வசதிக் குறைவாயிருக்கிறது. நாட்டின் நடுவே ஆல்பைன் மலைத் தொடர் தென் வடலில் போவதனால், அதினின்று உற்பத்தியாகும் ஆறுகள் நீளமானவை யல்ல. என்றாலும், மிக உயரத்திலிருந்து சமுத்திரத்தை நோக்கிப் பாய்வதனால், வெகு வேகமாகப் பாய்கின்றன. வேகமாகப் பாயும் ஆற்றைக் கடப்பதும் கஷ்டமான காரியம். மலைகள் மீது அரண்களை அமைத்துக் கொள்ளலாம். ஆறுகளைக் கடக்க முயலும் படைகளை மலை மீதிருந்து சுட்டு வெல்லலாம். ஆகவே தான் தற்காப்புப் போராட்டம் எளிது என்றோம். ஆனால் தாக்குதல் போராட்டமோ மகா கடுமையானது. ஏனென்றால், மலைத் தொடர்களில் எதிரி அரண்களும் பதுங்கு மிடங்களும் மிகுதியும் உண்டு. அவற்றைக் கண்டு பிடித்து, பக்குவமாகத் தாக்கிக் கைப்பற்ற வேண்டும். இது மிகவும் கஷ்டமான போர் காரியந் தான். இரண்டாவதாக, மழை அதிகமானால், முன்னேறித் தாக்க முடியாது தடைப்படும். மூன்றாவதாக வெகு வேகமாகப் பாயும் ஆறுகளைக் கடந்து முன்னேறுவதும் மகா கஷ்டம். போதாக் குறைக்கு ஆறுகளை யடுத்து சதுப்பு நிலங்கள் அதிகம். இந்த நிலத்தின் வழியே இராணுவங்கள் கடந்து போவதும் மிகவும் கஷ்டம். தற்காப்புப் படைகளுக்கோ சாதகங்கள் அதிகம்; தாக்குதற் படைகளுக்கோ பாதகங்கள் அதிகம். இந்த நிலைமையில், சாதாரணமாக, தற்காப்புத் தான் வெற்றி பெறும். ஆனால், இத்தாலியிலோ தாக்கும் படைகளுக்குத் தான் வெற்றி. இதற்குக் காரணமென்ன? தன் பலத்தையும் எதிரியின் பலத்தையும் சீர்தூக்கிப் பார்த்து, அறிவைத் துணை கொண்டு, தக்க முறைகளைக் கையாண்டனர். ஜெர்மன் படைகளும் சாமானியமானவையல்ல. நல்ல தேர்ச்சி பெற்ற 9 டிவிஷன்கள் கொண்டது அந்த ஜெர்மன் படை. அதன் தலைவர் கேசல்ரிங். படைகளை நடத்திச் செல்வதில் கை தேர்ந்தவர். இவருடைய கையும் இத்தாலியில் ஓங்கவில்லை யென்றால், காரணம் என்ன? நேச நாட்டுப் படைகளின் உயரிய போர்த் திறமையல்லவா? படைத் தலைவர்களின் சிறந்த சமயோசித புத்தியல்லவா? அதனாலல்லவா நேச நாட்டுப் படைகள் இததாலியின் மேலக்கரையிலுள்ள கெட்டுனோ என்னும் கடற்கரைப் பட்டினத்தில் வந்திறங்க முடிந்தது. இந்தப் பகுதியில் கடலிலும் தரையிலும் ஏராளமான சுரங்க வெடிகளை எதிரிகள் விரவி வைத்திருந்துங் கூட, அவற்றிற் கெல்லாம் தப்பித்து நேச நாட்டுப் படைகள் இறங்கின வென்றால், இந்தப் படைகளின் உயர்வை என்ன சொல்லிப் புகழ்வது! இந்தப் படையின் தலைவர் ஜெனரல் மார்க் கிளார்க். நெட்டுனோ என்னும் பட்டினம் காரிக்லியானோ ஆற்றிற்கு 80 மைல் தூரத்தி லிருக்கிறது. பான்டைன் சதுப்பு நிலத்திற்கு அப்பாலுள்ள சம பூமிக்கு இங்கிருந்து இலகுவில் போகலாம். இந்தச் சம பூமி ரோமாபுரிக்குத் தென் புறத்திலிருக்கிறது. ஆகவே, ரோமாபுரியை நோக்கி நேச நாட்டுப் படைகள் முன்னேறுவதற்கு வேண்டிய வசதி யமைந்து விட்டதென்று சொல்லலாம்.

இந்தப் படை நெட்டுனோவி லிறங்குமென்று ஜெர்மானியர்கள் கனவிலுங் கூட நினைக்கவில்லை. ஆகவே, அவை இறங்கி 2 மணி நேரம் வரையிலும், எதிர்ப்பே இல்லை. இந்தப் படைகள் சுமார் 2 மைல் தூரம் உள் நாட்டில் நுழைந்திருக்கின்றன. கரையோரத்தில் 4 மைல் தூரம் வரை, பல மைல்கள் தூர நீளத்திற்கு நேச நாடுகள் கைப்பற்றிக் கொண்டன. பிறகு தான் கிளம்பின எதிரிப் படைகள். கடுமையான போராட்டங்கள் பல நடைப்பெற்றன.

நிற்க, கார்க்லியானோ போர் முனையிலும் கடுமையான போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. எதிரிகள், தாம் ஊன்றி நின்று போராட முடியாது போகும் போதெல்லாம், மைல் கணக்காகப் பின் வாங்கி அதற்குப் பின்னேயுள்ள அரணில் இருந்து கொண்டு போராடுகிறார்கள். இங்கே வெற்றி தோல்விகள் இரு தரத்தாருக்கும் மாறி மாறிக் கிடைக்கின்றன. என்றாலும், மொத்தத்தில் கணக்குப் பார்த்தால், நேச நாட்டுப் படைகள் தான் கொஞ்சங் கொஞ்சமாக முன்னேறிக் கொண்டிருக்கின்றன.

யுத்தத் தளவாடங்களும் உதவிப் படைகளும் நேச நாட்டுப் படைகளுக்கு ஏராளமாக வந்து குவிந்த வண்ணமிருக்கின்றன. வாழ்வதா? சாவதா? எனத்தக்க முறையில் இரு தரத்தினரும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ரோமாபுரிக்குப் போகும் அப்பைன் பெரு வழிக்கு 8 மைல் தூரத்தில் தான், ஜெனரல் மார்க் கிளார்க்கின் படைகள் இறங்கின. இந்தப் பெரு வழியை இலகுவில் வெடிகுண்டுகளால் தாக்கக் கூடிய தூரத்தில் தான், நேச நாட்டுக் கப்பல்களும் கூட இருக்கின்றன. ஜெர்மன் படைத் தலைவரான கேசல்ரிங்குக்கு உதவிப் படைகள் வந்து சேர ஒட்டாதபடி எல்லா போக்கு வரவுப் பாதைகளையும் நேச நாட்டுப் படைகள் தும்சம் செய்து கொண்டிருக்கின்றன. அன்சியோ என்னும் துறைமுகமும் நேசநாட்டினர் வச மிருப்பதாகத் தெரிகிறது.

மின்டூர்னோ பகுதியில் நடைபெற்ற கடும் போரில், ஜெர்மன் படைகளில் பாதிக்கு மேல் கொல்லப்பட்டன. ரோமாபுரிக்குத் தெற்கே இறங்கிய நேச நாட்டுப் படைகள் ஜெனரல் அலெக்சாந்தர் தலைமையில் முன்னேறி, ஜெர்மன் போக்கு வரவு சாதனங்களை நாசஞ் செய்து கொண்டிருக்கின்றன. இதன் பயனாக, கஸ்டாவ் லைனுக்குப் பின்புறமுள்ள லட்சம் பேர்களைக் கொண்ட ஜெர்மன் படை, ரோமாபுரிக்கு வரமுடியாதிருக்கிறது.

நிற்க ரோமாபுரியில் ஐந்தாம் படை வேலைகள் நடைபெறுவதாகத் தெரிகிறது. ஆகவே, அந்த அரசாங்கத்தார், இரவில் யாரும் வெளியில் நடமாடக் கூடாதென்று ஒரு கட்டளை பிறப்பித்திருப்பதாகவும் தெரிகிறது.

போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

சென்ற வாரங்கூட பெர்லினில் தொடர்ந்து யுத்தம் நடைபெற்றது. 21-ம் தேதி பிரிட்டிஷ் விமான தளங்களிலிருந்து கிளம்பிப் போய் ஜெர்மன் தலை நகரத்தைத் தாக்கப்போன லங்காஸ்டர், ஹாலிபாக்ஸ் விமானங்களைப் போன்ற பெரிய விமானங்கள் இதுவரை கிளம்பியதே கிடையாது. இவை அரைமணி நேரத்தில் 2,300 வெடி குண்டுகளை உதிர்த்தன. சென்ற இரண்டு மாதங்களில் இதற்கு முன்பு 10 முறை பெருங் கூட்டமாக வந்து பெர்லினைத் தாக்கி யிருக்கின்றன. சென்ற நவம்பர் மாதத்திலிருந்து வெடி குண்டுகளால் ஜெர்மனிக்கு நேர்ந்திருக்கக் கூடிய நாசத்தைப் போல், ‘வேறெந்தத் தனிப்பட்ட இடத்திலும் ஏற்பட்டதாக உலக சரித்திரத்திலேயே கிடையா’ தென்று கொலம்பியா வானொலி நிலைய விமர்சகரான ஹோவார்ட் ஸ்மித் கூறுகிறார். அவர் மேலும் கூறுவதாவது :—

“ வார்சா, ராட்டர்டாம், கவென்ட்ரி, ஸ்டாலின்கிராட், ஹாம்பர்க் ஆகிய இடங்களில் நேர்ந்த விமானத் தாக்குதல்கள் எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தாலும் அது இதற்கு ஈடாகாது. 30 முதல் 50 சத விகிதமுள்ள நகரங்கள் மீண்டும் பழுதுபார்க்கமுடியாதபடி நாசமடைந்துவிட்டனவென்று பிரயாணிகள் கூறுகிறார்கள்.”

இந்தப் பரந்த நகரத்தில் கட்டடங்கள் மிகுந்துள்ள பகுதியில் 7-ல் ஒரு பகுதியை நேசதேச வெடிகுண்டு விமானங்கள் தரைமட்டமாக்கி விட்டதாக மற்றொரு அறிக்கை கூறுகிறது. பெர்லினை நாசப்படுத்தவேண்டிய அவசியம் என்னவென்னும் கேள்வி பிறக்கக்கூடும். இது பற்றி பிரபல அமெரிக்கப் பத்திரிகாசிரியையான ஸ்ரீமதி டோராதா தாம்சன் கூறுவதாவது :—

“ பெர்லினை வெடி குண்டுகளைக் கொண்டு தாக்குவதில் ஒரு விசித்திரமான முக்கியத்துவம் அடங்கியிருக்கிறது. ஏனென்றால், ஜெர்மன் அரசாங்கத்தை அப்படி அமைத்திருக்கிறார்கள். ஆதிக்க மெல்லாம் ஒரே இடத்தில் வகிக்கப்பட்டுள்ள தோர் அரசாங்கம், உலகிலே வேறெங்கும் கிடையாது. பல கிளைகளுக்கு மத்திய ஸ்தானமாக பெர்லின் இருக்கிறது. இது பெர்லின் அரசாங்கத்துக்கு மட்டுமல்ல ; ஐரோப்பாவில் ஹிட்லர் வகுத்துள்ள புதிய அமைப்பிற்கும் இது தான் உயிர் போன்றது. கைத்தொழில் ஸ்தாபனங்கள் அனைத்திற்கும் முக்கிய ஸ்தானமாக விளங்குவது பெர்லின் தான். நாஜி பொருளாதார முறை, எல்லாவற்றையும் திருத்தி யமைப்பது மட்டு மல்ல. ஆனால், ஒவ்வொரு தொழிற்சாலையும், மூலப் பொருட்களுக்கும், தொழிலாளர்களுக்கும், உற்பத்திக்குத் தேவையான எல்லாவற்றிற்கும் பெர்லினைத் தான் எதிர்பார்க்க வேண்டும். ஜெர்மன் பொருளாதார வாழ்க்கையே பரந்ததோர் கூட்டுறவு முறையில், பெர்லின் மேலாதிக்கத்திற்குட்பட்டு, அமைந்திருக்கிறது. பெர்லினே அடியோடு அதிகாரத் திமிர் கொண்டிருக்கிறது. எல்லாவற்றிற்கும் மிகத் துல்லிதமான கணக்குகள் வைக்கப்பட்டிருக்கின்றன . . . . . . பெர்லின் நகரமே ஒரு பெரிய கைத்தொழில் ஸ்தலம். இங்கிருந்து ஜெர்மனி முழுதும் அநேக ரயில்வேக்கள் பிரிகின்றன.”

தன் முடிவுரையில் ஸ்ரீமதி டோரதி தாம்சன் “ இந்தப் போட்டிப் போராட்டத்தில், உடல் வலி என்னதான் மிகுந்திருந்தாலும், தலை சுழன்று கொண்டிருக்கும் போது இயங்கவே முடியாது ” என்று குறிப்பிடுகிறார்.

சென்ற 22-ம் தேதி சனிக்கிழமை, மத்திய ஜெர்மனியிலுள்ள முக்கியமான கைத்தொழில் நகரமான மாக்டிபரோ என்னுமிடத்தை, பிரிட்டிஷ் விமான வெடிகுண்டுப் படை தாக்கி 2,000 டன் வெடி மருந்துகளையும் வெடி குண்டுகளையும் உதிர்த்தது. இந்நகரம் சாக்சனியின் பண்டைக் காலத் தலை நகரமாயிருந்தது. ப்ரான்ஸ்லிக்குத் தென் கிழக்கே 50 மைல் தூரத்திலிருக்கிறது. ஜெர்மனி முழுதுக்குமே இங்குள்ள பீட்ரூட் சுத்தஞ் செய்யும் தொழிற்சாலை தான் மிகப் பெரிது. இங்கே ஏராளமான தொழிற்சாலைக ளிருக்கின்றன. இவற்றுள் மிகவும் முக்கியமானது **க்ரப்ஸ் இரும்புத் தொழிற்சாலை**. மாக்டிபரோவிலுள்ள மற்ற தொழிற்சாலைகளில், விமானப் பகுதிகள், இயந்திர ஆயுதங்கள், இரசாயனப் பொருட்கள், முதலியவையும் உற்பத்தியாகின்றன. இவை மட்டுமன்றி, ஜெர்மன் இராணுவக் காரியாலயமும், நிர்வாகக் காரியாலயங்களும் இங்கே தான் இருக்கின்றன.

பெர்லின், மாக்டிபரோ முதலிய கைத்தொழில் நகரங்களை நேச தேச விமானப் படைகள், தாக்குவதின் கொள்கை இன்னதெனத் தெளிவாகத் தெரிகிறது. சர் ஆர்ச்சிபால்ட் சிங்க்லேர் சென்ற 22-ம் தேதி சனிக்கிழமை ப்ளிமௌத்தில் பேசும்போது, “ பொது ஜனங்கள் நமது குறிக்கோளல்ல. ஜெர்மன் யுத்தத் தொழில்களும் போக்குவரவுகளும் ஸ்தம்பிக்க வேண்டு மென்பது தான் நமது நோக்கமெல்லாம். கோவில்கள் நம் குறிக்கோள்களல்ல ; ஆனால் ஜெர்மன் யுத்தக் கைத்தொழில்களும், போக்குவரவுகளும் உள்ள நகரங்களும்தான் நம் குறிக்கோள்கள், நமதுநோக்கத்தினின்று நம்மை வழுவும்படிச்செய்ய எதனாலும் முடியாது,” என்று குறிப்பிட்டார். நேர்முகமாக யுத்த முயற்சியில் சம்பந்தங் கொண்டுள்ள ஜெர்மன் கைத்தொழில்களான ஜெர்மன் போக்குவரவுகளான ரயில்வேக்கள், விமானங்கள், கப்பல்கள் முதலியவற்றையும் அவற்றைச் சேர்ந்த ரயில்வே நிலையங்களையும், கப்பல்களையும், நீர் மூழ்கிக் கப்பல்களையும், கட்டிப் பழுது பார்க்குமிடங்களையும் இடைவிடாது பிரிட்டிஷ் விமானப் படைகள் தாக்கிக்கொண்டிருக்கின்றன. ஏனென்றால் அப்படித்தான் ஜெர்மன் உற்பத்திகளைத் தடுக்க முடியும்.

கொஞ்ச காலத்திற்கு முன்பு, வெடிகுண்டுத் தாக்குதல்கள் பற்றி நேச நாடுகள் கொண்டிருந்த கொள்கை சம்பந்தமாக சர் ஆர்ச்சிபால்ட் சிங்க்லேர் கூறியதாவது :—

“ அவர்களுடைய யுத்தக் கைத்தொழில்கள் ஸ்தம்பிக்கிற வரையிலும், போக்குவரவு சாதனங்கள் சிதைகிற வரைக்கும், போராட வேண்டு மென்னும் எண்ணம் சிதைகிற வரைக்கும் இடைவிடாது எதிரியை விமானங்களிலிருந்து தாக்கிக் கொண்டே யிருப்போம்.”

சென்ற நான்கு வருஷங்களாக நடைபெற்ற யுத்தத்தில், முக்கியமான ஜெர்மன் தொழிற்சாலைப் பகுதிகளில் வீசப்பட்ட வெடி குண்டுகளின் கனம் படிப்படியாக உயர்ந்திருப்பதைக் கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் விளக்குகின்றன :—

		டன்கள்.
1940 ஜூலை முதல் செப்டம்பருக்குள்	..	2,750
1940 அக்டோபர் முதல் டிசம்பருக்குள்	..	2,500
1941 ஜனவரி முதல் மார்ச்சுக்குள்	..	2,700
1941 ஏப்ரல் முதல் ஜூனுக்குள்	..	7,200
1941 ஜூலை முதல் செப்டம்பருக்குள்	..	8,800
1941 அக்டோபர் முதல் டிசம்பருக்குள்	..	4,300
1942 ஜனவரி முதல் மார்ச்சுக்குள்	..	3,500
1942 ஏப்ரல் முதல் ஜூனுக்குள் ..	..	12,300
1942 ஜூலை முதல் செப்டம்பருக்குள்	..	15,600
1942 அக்டோபர் முதல் டிசம்பருக்குள்	..	5,600
1943 ஜனவரி முதல் மார்ச்சுக்குள்	..	17,400
1943 ஏப்ரல் முதல் ஜூனுக்குள் ..	..	36,700
1943 ஜூலை முதல் செப்டம்பருக்குள்	..	44,100
1943 அக்டோபர் முதல் டிசம்பருக்குள்	..	38,550

யுத்தம் ஆரம்பமான காலம் முதல் 1943-ம் வருஷக் கடைசி வரையில் ஜெர்மனியிலுள்ள முக்கியமான இடங்களில் 202,000 டன் வெடிகுண்டுகள் வீசப்பட்டன வென்று கணக்கிடப் பட்டிருக்கிறது. இதில், 136,000 டன் 1943-ம் வருஷத்தில் மட்டும் வீசப்பட்டன. ஜெர்மனியர் வசப்பட்ட இதர ஐரோப்பிய நாடுகளில் வீசப்பட்ட 20,000 டன்களையும் சேர்த்துப் பார்த்தால், 156,000 டன் வெடிகுண்டுகள் ஹிட்லருடைய ஐரோப்பாவில் 1943-ம் வருஷம் வீசப்பட்டன வென்று தெரியவரும்.

ஹிட்லருடைய கைத்தொழில் பகுதிகளை, அமெரிக்க விமானப் படைகள் வெடிகுண்டுகளைக் கொண்டுதாக்கிக் கொண்டிருந்தன. 1942-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 1-ம் தேதி பிரிட்டிஷ் தளங்களிலிருந்து, அமெரிக்க விமானப் படைகள் எதிரிகளைத் தாக்கும் பொருட்டு முதன் முதல் கிளம்பின. 50,000 டன் வெடிகுண்டுகளை எறிந்திருக்கின்றன. இதில், 1943-ம் வருஷத்தில் மட்டும் 20,000 டன் வெடி குண்டுகள் எறியப்பட்டன.

பிரிட்டனில் தளங் கொண்டுள்ள பிரிட்டிஷ் வெடி குண்டு விமானப் படையின் தாக்குதல்கள், எப்படிப் படிப்படியாக உயர்ந்து வந்திருக்கின்றன என்பதைக் கீழ்க்கண்ட புள்ளி விவரங் கள் விளக்கும் :—

1939-40-ல் ஒரு நாளைக்கு 1 டன்.
1940-41-ல் ஒரு நாளைக்கு 55 டன்.
1941-42-ல் ஒரு நாளைக்கு 90 டன்.

(10-ம் பக்கம் பார்க்க.)

ஜெனரல் டோஜோவின் வாழ்த்துச் செய்தியில் வீழ்ச்சிக் குறிப்பு

ஜப்பானுடைய உள் நாட்டுப் பிரசார ஆராய்ச்சி



ஜப்பானிய முதன் மந்திரி டோஜோ.

(டி. ஏ. வி. நாதன்.)

காலம் மாறிக்கொண்டே போகிறது. அத்துடன் மக்களுடைய மனோ பாவமும் மாறுகிறது. இந்த மாறுதலுடைய தன்மை அவ்வப்போதுள்ள உலக நிலையையும், அந்த நிலையினால் பாதிக்கப்பட்ட மக்களையும் பொருத்திருக்கிறது. இந்த உண்மையை அச்சுப் பிரசாரத்தின் போக்கில் விளக்கமாகக் காணலாம். யுத்த நிலைமை எப்படி யிருக்கிறதோ அதற்குத் தகுந்த மாதிரியாக அச்சுப் பிரசாரம் பொதுவாக மாற்றப்படும். இப்பிரசாரத்தில் வெவ்வேறு பாகுபாடுகள் உண்டு. அவைகளுக்குத் தகுந்த மாதிரியாக, பிரசாரம் சில சிறப்பான மாறுபாடுகள் அடையும். உதாரணமாக, அச்சு உள்நாட்டுப் பிரசாரம் யுத்த நிலைமையை அனுசரித்து, ஒரு விதமான கொள்கையைப் பின்பற்றும். வெளிநாட்டுப் பிரசாரம் அதற்கு நேர்மாறான முறையில் நடத்தப்படும். உள்நாட்டில் மக்களுடைய ஆதரவையும், உதவியையும் அதிகமாகப் பெறுவதற்கு, யுத்த நெருக்கடியை அச்சுப் பிரசாரத் தலைவர்கள் குறிப்பாக விளக்கிக் காட்டுவார்கள். ஆனால், வெளிநாட்டுப் பிரசாரத்தில், தங்களுடைய தோல்விகளை மறைத்து, வீண் பெருமை கூறி, அட்டகாசம் செய்வார்கள். இந்த மாறுபாட்டுத் தந்திரங்களையும் முரண்பாடுகளையும் சென்ற சில நாட்களின் ஜப்பானியப் பிரசாரத்தில் முக்கியமாகக் காணலாம்.

முதலில், ஜப்பானிய முதல் மந்திரி அவர்கள் விடுத்த புது வருஷ வாழ்த்துச் செய்தியை எடுத்துக் கொள்வோம். அதில் ஜப்பானின் உண்மை நிலையை ஜப்பானியர்களுக்கு ஜெனரல் டோஜோ விளக்கிக் கூறியிருக்கிறார்.

"ஜப்பானிய மக்களுக்கு இது ஒரு நெருக்கடியான சோதனைகாலம். பிரிட்டிஷாரும், அமெரிக்கர்களும் எதிர்த்துத் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள். யுத்தம், தீர்மானமான முடிவு ஏற்படும்படியான நிலைமையில் இருக்கிறது, இந்தப் போராட்டத்தில் வெற்றியடைந்தால், அகில கிழக்காசியா திட்டம் வெற்றி யடையும். இல்லையேல், அது வீழ்ச்சி யடைந்துவிடும். ஆகையால், எதிரிகளைத் தோற்கடிப்பதற்கு, ஜப்பானிய மக்கள் அனைவரும் யுத்தகாலத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கிறார்கள். சிப்பாய்கள் உள்ள போர் முனைக்கும், சாதாரண மக்கள் உள்ள உள்நாட்டு முயற்சிக்கும் இனிமேல் யாதொரு வித்தியாசம் கிடையாது."

—என்று ஜெனரல் டோஜோ புலம்பியிருக்கிறார்.

ஜப்பானின் உள் நாட்டு நிலைமை

வாழ்த்துச் செய்தியில் வீழ்ச்சிக் குறிப்புக் காணப்படுமானால், உள் நாட்டு நிலைமை சற்று கவலைக்கிடமானதாய்த் தான் இருக்க வேண்டும் என்பது புலப்படும். சென்ற வருஷமும், அதற்கு முன்னும் ஜெனரல் டோஜோவின் பேச்சுகளிலும் அறிக்கைகளிலும் இப்படிப்பட்ட அவலக்குறி இல்லை. அப்போதெல்லாம், ஜப்பானிய பிரசார ஆரவாரத்துக்கு, அளவே கிடையாது. ஜப்பானியர்கள் வானத்தை வில்லாக வளைக்கிறார்கள். மணலைக் கயிராகத் திரித்து அதில் கட்டிவிட்டார்கள். காற்றைத் திரட்டி கடலில் நனைத்து அதை நாணாக அமைத்திருக்கிறார்கள்; வில்லில் நாண் தொடுத்து உதய சூரியன்மேல் பிரயோகித்து முழு சூரியனும் வெளிக் கிளம்பும்படியாகச் செய்யப் போகிறார்கள்........இந்த மாதிரியாக, இல்லாததும் பொல்லாததுமான செய்திகளைக் கூறி, ஜப்பானிய மக்களுக்கு உற்சாகமும் தைரியமும் ஊட்டி வந்தார்கள். ஆனால், இப்போது இந்த ஆனந்த-பைரவி ராகம் உள்நாட்டு அச்சுப்பிரசாரத்தில் காண்பது கடினம். ஏனென்றால், வீணான பொய் வெற்றிப் பாட்டுப் பாடினால், மக்களுடைய தீவிர யுத்த முயற்சி குறைந்துவிடும் என்ற எண்ணந் தான். காரியம் ஆகவேண்டுமல்லவா; அதற்காகத் தான் ஜெனரல் டோஜோ சோக ரசங் கலந்த ராகத்தில் இப்போது பாடுகிறார்.

"ஆடிக் கறக்கிற மாட்டை ஆடிக் கறக்கவேண்டும், பாடிக்கறக்கிற மாட்டை பாடிக் கறக்க வேண்டும்," என்று ஒருபழமொழி கூறுவார்கள். அதைச் சிறிது மாற்றிக் கொண்டால் சிறப்பாக டோஜோவினுடைய வார்த்தைகளுக்கும், பொதுவாக இப்போது நடந்து வரும் ஜப்பானியப் பிரசாரத்துக்கும், பொருத்தமாகும்படி செய்யலாம். ஆடிக் கறக்கிற மாட்டை அவசியம் நேர்ந்தால் பாடிக் கறக்க வேண்டும்; பாடிக் கறக்கிற மாட்டை முழுப்பயனடைய வேண்டுமென்றால் ஆடியும் கறக்கவேண்டும்," என்று வைத்துக் கொள்ளலாம். அதன்படி, முன்னர் பொய் மொழிகளால் உற்சாக மூட்டிய ஜப்பானிய மக்களை, இப்போது மெய் நிலைமையை எடுத்துக் கூறி, அவர்களுடைய பூரண ஆதரவையும் தேடும்படியான சமயம் வந்து விட்டது.

டோக்கியோவின் சமாதானம்

ஜப்பானிய உள்நாட்டு நிலைமையை வலுப்படுத்துவதற்காகவும், மக்களின் பூரண ஆதரவைப் பெறுவதற்காகவும், மும்முரமான பிரசாரம் நடந்து வருகிறது. சமீபத்திற் டோக்கியோ வானொலி நிலையம் உணவுப் பிரச்சினையைப் பற்றிக் குறிப்பிட்டது.

"அரிசி கிடைப்பது மிகக் கஷ்டமாய், பஞ்சம் ஏற்படும்படியான நிலைமை ஏற்படுமானால், தெற்கிலிருந்து கப்பல் மூலமாக அரிசி கொண்டு வருவதற்குக் கப்பலில் இட வசதி செய்து கொடுக்கப்படும்,"

என்று அறிவித்தது. மற்றொரு சமயத்தில்,

"ஐரோப்பாவில் எலிகளையும் காக்கைகளையும் மக்கள் புசிக்கிறார்கள். அந்த நிலைமைக்கு நாம் வரவில்லை,"

என்று டோக்கியோ சமாதானம் சொல்லுகிறது.

இதனால் ஜப்பானின் உள்நாட்டு நிலைமை மிக மிக மோசமாய் விட்டது என்று நாம் நினைத்து விடக்கூடாது உள் நாட்டுக் கஷ்டங்கள் பல இருந்தாலும், அவைகளை மிகைப்படுத்த ஜப்பானியத் தலைவர்கள் ஜப்பானியர்களுக்குக் கூறுகிறார்கள். அவர்களை அதிகமாக வேலை செய்யத் தூண்டுவதற்காக, ஜப்பானுடைய பலாபலத்தைப் பற்றி நாம் சில விஷயங்களை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். "ஜெர்மனியினுடைய அழிவு காலம் இந்த வருஷ முடிவுக்குள். அதன் பின் ஜப்பான் உடனே வீழ்ச்சி யடைந்துவிடும்" என்று சிலர் கூறுகிறார்கள். இது, விஷயம் அறிந்தவர்களுடைய பேச்சல்ல; ஜப்பானைப் பற்றியும் ஜப்பானியர்களைப் பற்றியும் நன்றாக ஆராய்ந்தவர்கள் இதை "அபாயம் விளைவிக்கக் கூடிய முட்டாள் தனமான பேச்சு" என்று கண்டித்திருக்கிறார்கள். ஜப்பானியர்கள் ஆவேசம் மிகுந்த முரடர்கள்; முடிவில் தோல்வி நிச்சயம் என்று உணர்ந்த போதிலும், விடாப் பிடியாகப் போராடும் வீணர்கள். அவர்களை முறியடித்துத் தோற்கடிப்பது சுலபமான காரியம் தான் என்று நாம் நினைத்துவிடக் கூடாது. தென் மேற்குப் பசிபிக் பிரதேசத்தில் அவர்கள் சில தீவுகளைக் காலி செய்திருக்கிறார்கள்.

தென் பசிபிக் பிரதேச நிலைமை

சென்ற டிசம்பர் 15-ந் தேதி நியூ பிரிட்டன் தீவைக் கைப்பற்றுவதற்காக நேச தேசத்தார்கள் போர் தொடங்கி யிருக்கிறார்கள். அன்றையத் தினம் தென் கோடியில் உள்ள அராலி என்ற தீபகற்பத்துக் கருகிலுள்ள கேப் மார்க்கஸ் பிரதேசத்தில், அமெரிக்கத் துருப்புகள் இறங்கின. இதற்கு முன், நியூ பிரிட்டனின் வடக்கில் உள்ள, கேப் கிளாஸ்டர் பிரதேசமும் அவைகளால் கைப்பற்றப்பட்டது. இவைகளைப் பலப்படுத்திக் கொண்டு, ரபால் என்ற பெரும் ஜப்பானியக் கோட்டை தளத்தைக் தகர்ப்பதற்கு ஆரம்பமாக, ஒரு பெரிய விமான தளம் அமைக்க வேண்டும். இம்மாதிரியான வேலையில் அமெரிக்கர்கள் சிறந்த அனுபவசாலிகள். நியூ பிரிட்டனுக்கு அடுத்தாற் போல் மேற்கில் உள்ள நியூகினி என்ற பெருந் தீவில், ஆஸ்டிரேலியர்கள் போர்ட் மோரெஸ்பி என்ற கடற் படைத் தளத்தைத் தாக்க வந்த ஜப்பானியர்களை விரட்டி விட்டார்கள். மற்றொருபுறம் சாலமன் தீவுகளில் தெற்கில் உள்ள குடால்கனார் என்ற முக்கியமான தீவை அமெரிக்கர்கள் கடுமையான சண்டைக்குப் பிறகு, கைப்பற்றிக் கொண்டார்கள். இந்த விவரங்களெல்லாம் ஏன் கூறப்படுகின்றனவென்றால், இந்த வெற்றிகளின் பயனாக, ரபால் என்ற ஜப்பானிய தளத்தின் மீது இரண்டு பக்கங்களிலிருந்தும் தாக்குதல்கள் தொடங்கலாம். ரபாலைக் கைப்பற்றுவது கடினம்; அதற்கப்பாலுள்ள கோரலின் தீவுகளைக் கைப்பற்றுவது அதை விடக் கடினம். ஏனென்றால், ரபாலை ஜப்பானியர்கள் சமீபத்தில் கைப்பற்றி, அதைப் பெரிய யுத்த தளமாக நிர்மாணித்தார்கள். ஆனால் ரேலின் தீவுகள் 20 வருஷங்களாக ஜப்பானியர்களிடமே இருந்து வருகின்றன. அவைகளைச் சிறந்த கோட்டைகளாக அவர்கள் பலப்படுத்தியிருப்பார்களென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. 8,000 மைல் நீளமுள்ள ஒரு வட்டமான போர் முனையை ஜப்பான் பாதுகாக்க முயற்சி செய்கிறது. கொஞ்சங் கொஞ்சமாக, தீவு தீவாக, கைப்பற்றி முன்னேறி, கடைசியில் ஜப்பானைத் தாக்கும்படியான நிலைமை ஏற்படும்.

அட்மிரல் ஷிமாடாவின் பொய்க் கணக்கு.

அந்த நிலைமைக்குப் பெரிய துணை பலம் நேச தேசத்தார்களிடமிருக்கிறது. அவர்களுடைய கடற்படை பலமும், விமான பலமும் தான் நியூகினி, நியூபிரிட்டன் பிரதேசங்களில் வெற்றி யடைந்து வருவதற்குக் காரணம். ஆனால் நேச தேசக் கடற்படை பலத்தைப் பற்றி ஜப்பான் வேடிக்கையான பிரசாரம் செய்து வருகிறது. ஜப்பானிய கடற்படை மந்திரி, அட்மிரல் ஷிமாடா, ஜெர்மன் பிரஸ் ஏஜென்சி நிருபருக்கு டிசம்பர் 12-ந் தேதி பேட்டி யளித்தார். அதில் சமீபத்தில் போகன்வில் தீவுக்கருகில் நடந்த கடற் சண்டையில், அக்டோபர் 27 லிருந்து டிசம்பர் 3-ந் தேதி வரை 8 விமானந் தாங்கிக் கப்பல்கள், 4 யுத்தக் கப்பல்கள், 17 க்ரூய்ஸர் கப்பல்கள், 4 பெரிய நாசகாரிக் கப்பல்கள், 8 சாதாரண நாசகாரிக் கப்பல்கள், ஒரு பெரிய வகுக்கப்படாத போர்க் கப்பல், இவைகளெல்லாம் முழுகடிக்கப்பட்டன என்று விவரித்தார். இவையில்லாமல், கில்பர்ட் தீவுகளிலும், மார்ஷல் தீவுகளிலும் நடந்த சண்டைகளில் நேர்ந்த நஷ்டத்தையும் சேர்த்து, மொத்தம் 48 நேச தேசக் கப்பல்கள் முழு

(8-ம் பக்கம் பார்க்க.)

சுபேதார் மேஜர் போலா .சிங்

33 வருஷ சிறந்த தொண்டு

முதல்தர ஓ.பி.ஐ. பட்டம் பெற்ருர்

டில்லிக்கு அடுத்துள்ள ரோடக் ஜில்லாவில் பட்லி என்றெரு சிற்றூர் இருக்கிறது. அங்கே பிறந்தவர் போலா சிங். இவருடைய பரம்பரையே இராணுவ வீரர்கள். ஆகவே போலா சிங்கும் இராணுவத்தில் 1911-ம் வருஷம் சேர்ந்தார். அப்போது இந்திய குதிரைப் படைக்கு அனுப்பப்பட்டார். அங்கே நான்கு வருஷங்கள் வேலை பார்த்தார். பிறகு, ரூர்க்கி என்னு மிடத்தில் சர்வேயர் பயிற்சி பெற்றுத் தேறினுர். 1924.ம் வருஷத்தில் இவரையும் இன்னும் 8 பேர்களையும் (உத்தியோகஸ்தர்களையும் சிப்பாய்களையும்) கேகுல் என்னு மிடத்தில் பீரங்கி சர்வே பகுதிப் படையை யமைக்குமாறு பொறுக்கி யெடுத்தார்கள். 1939-ம் வருஷத்தில் போலா சிங் சுபேதார் மேஜர் பதவியை யடைந்து விட்டார். அவர் உபகாரச் சம்பளம் பெற்று படையை விட்டு விலகும் காலம் நெருங்கியது. அவருக்கோ படையை விட்டு விலகிக் கொள்ள விருப்ப மில்லை. ஏன்? அந்த வருஷம் போர் ஆரம்பமாகி விட்டது. 1940-ம் வருஷம் வரை அவர் வேலை பார்க்க அனுமதிக்க வேண்டு மென்று அவருடைய படைத் தலைவர் மேலதிகாரிகளுக்குச் சிபார்சு செய்தார். மேலதிகாரிகளும் ஒப்புக் கொண்டார்கள். 1941-ம் வருஷம் ஜூலை மாதம் அவர் பயிற்சி சாலையில் உத்தியோகம் பார்த்து வந்தார். அப்போது அவருக்கு கௌரவ சுபேதார் மேஜர் பதவி கிடைத்தது. அங்கிருந்து இந்திய சர்வே பாட்டரிக்கு மாற்றப் பட்டார். இந்த பாட்டரி, பிறகு, இந்திய சர்வே ரெஜிமெண்டாகப் பெருகியது. அதற்கு போலா சிங் சுபேதார் மேஜராக நியமிக்கப்பட்டார்.

இவர் இந்தியாவிலும், எல்லைப்புரத்திலும், மெசொபொடோமியாவிலும் சேவகம் செய்தவர். ஆகையால் மிகுந்த அனுபவம் அவருக்குண்டு. தான் இந்த பீரங்கி சர்வே பகுதி ஆரம்ப கால முதல், அது பாட்டரியாகி, ரெஜிமெண்டான பிறகுங்கூட, அதோடேயே வேலை பார்த்தார். அவருடைய தொழில் நிபுணத்துவத்திற்கும் நிர்வாகத் திறமைக்கும் அனைவரும் தலை வணங்கினுர்கள். தன் குடும்பத்தினர் படையில் சேர்ந்திருந்த போதிலும் அவர்களிடமும் பட்சபாதமில்லாமல் தான் நடந்து கொண்டார். இந்துக்களுக்கும் சீக்கியர்களுக்கும் முஸல்மான்களுக்கும் ஒரே மாதிரி நீதி செலுத்தி வந்தார்.

இவர் 33 வருஷங்கள் இந்தியப் படையில் உழைத்துக் கொண்டிருந்திருக்கிருர். இது பற்றி அவர் பெருமை கொள்ளுவது நியாயந் தான். இந்த 33 வருஷ வீர வாழ்க்கையில் 11 வீரப் பதக்கங்கள் பெற்றிருக்கிருர். சமீபத்திற் சுபேதார் மேஜர் போலா சிங் சர்தார் பகதூருக்கு 1-ம் தர ஓ.பி.ஐ. பட்டமும் கிடைத்தது. இந்தச் சின்னத்தை அவருடைய மார்பில் அணிந்த பிரிகேடியர் ஜி. டி .வி. வெல்ச்மான், டி.எஸ்.ஓ., ஓ.பி.இ., கீழ்க் கண்டவாறு அவரைப் பாராட்டிப் பேசினுர்.

"இந்த 1-ம் தர ஓ.பி.ஐ. பதக்கத்தை சுபேதார் மேஜர் போலா சிங் சர்தார் பகதூருக்கு வழங்குவது பற்றி நான் மகிழ்ச்சி யடைகிறேன். பீரங்கிப் படைத் தலைவரான மேஜர் ஜெனரலின் சார்பாக நான் அவரை என் முழு மனதோடு பாராட்டுகிறேன்."

சுபேதார் மேஜர் போலா சிங், ஓ.பி.ஐ.



சுபேதார் மேஜர், தான் முதல் தர ஓ.பி.ஐ. பதக்கம் பெறு முன்னதாக, அணிவகுப்புக்கு எதிரில் நிற்கிருர்.



பிரிகேடியர் ஜி. டி. வி. வெல்ச்மான், டி.எஸ்.ஓ., ஓ.பி.இ., சுபேதார் மேஜர் போலா சிங்குக்கு முதல்தர ஓ.பி.ஐ. பதக்கம் சூட்டுகிருர்.



பரிசளிப்பு விழாவிற்குப் பிறகு, அணி வகுப்பு மரியாதையை பிரிகேடியர் ஜி. டி. வி. வெல்ச்மான், டி.எஸ்.ஓ., ஓ.பி.இ., ஏற்றுக் கொள்ளுகிருர். அவருக்குப் பக்கத்தில், சுபேதார் மேஜர் போலா சிங்கும் நிற்கிருர். அன்றியும், மேஜர் பி. ஜே. வில்லியம்ஸ், பிரிகேடியர் ஏ. ஜே. டி. ரோனுல்ட் ஆகியோர் நிற்கின்றனர்.

உணவுப் பிரச்சினையைத் தீர்க்க அரசாங்க முயற்சி

விலைவாசிகள் கட்டுப்பாடும் விநியோகமும்

போக்குவரவு வசதிகள்

(கே. மணத்துணைநாத தேசிகர்.)

நம் தேசத்தில் உணவுப் பொருள் விஷயம், பர்மாவின் வீழ்ச்சிக்குப் பிறகு, முக்யத்துவம் பெற்றது. அதன் பிறகும், கொஞ்ச நாள் வரையில் நம் தேசம், உணவுப் பொருள் விஷயத்தில் அபாயமற்ற நிலையில் இருந்ததாகக் கருதப்பட்டு வந்தது. உணவுப் பொருள்களைத் திரட்டிப் பங்கீடு செய்வதற்கு, இந்தியா அரசாங்கத்தாரும், சென்னை அரசாங்கத்தாரும் பல ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். தானியங்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கும் வாங்கி சாப்பிடுகிறவர்களுக்கும், நியாயமான விலை நிலவும்படி ஏற்பாடுகள் செய்ய முயற்சி செய்து வருகிறார்கள். இந்தியா, பல பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பாகத்திற்கும், உணவுப் பொருள்களைப் பங்கிடும் விஷயத்தைக் கவனிக்க, ஒவ்வொரு கமிஷனர் நியமிக்கப்பட்டிருக்கிறார். மத்தியில் இருப்பவர்களின் லாபத்தைக் குறைத்து, உபரியாயுள்ள மாகாணங்களிலிருந்து, குறைவு மாகாணங்களுக்குப் பொருள்கள் அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. இந்த ஏற்பாட்டின்படி சாகுபடி செய்வோரிடமிருந்து நேராகவோ, ஏஜண்டுகள் மூலமாகவோ, அரசாங்கத்தார் வாங்குகிறார். குறைவு ஏற்பட்டுள்ள பிரதேசங்களுக்கு சர்க்காரே அனுப்புகிறார்கள். உதாரணமாக, பஞ்சாப், சிந்து முதலிய மாகாணங்களிலிருந்து வங்காளத்திற்கும், சிந்து மாகாணத்திலிருந்து திருவாங்கூர், கொச்சி, முதலான சமஸ்தானங்களுக்கும் இறக்குமதியாகின்றன. இந்தியா முழுதும் ஒரே உணவுத் திட்டம் வகுக்கும் நோக்கத்துடன், நகரங்களில் பங்கீடு முறையை அமுலுக்குக் கொண்டு வரவும், மாகாணங்களுக்குள் ஒரே மாதிரி விலை நிலவும்படி கட்டுப்பாடு முறையை அமுல் நடத்தவும், அவசியமான நடவடிக்கைகள் எடுக்க, ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

வெளி நாடுகளிலிருந்தும் உணவுப் பொருள்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. இதுவரை, 37 கப்பல்கள் மூலம் உணவுப் பொருள்கள் நம் தேசத்தில் பல பாகங்களிலும் முக்யமாக வங்காளத்திலும், இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன. இதற்கென உணவு இலாகா ஒன்று தனியே ஏற்படுத்தி, அதற்கு நிர்வாக சபை அங்கத்தினர்களில் ஒருவரை நியமித்திருக்கிறார்கள். இப்பொழுது அறுவடையாகப் போகும் மகசூலின் விலையைக் கட்டுப்படுத்தி, நிர்ணயஞ் செய்ய, மாகாணப் பிரதிநிதிகளின் கூட்டம், உணவுப் பொருள் அங்கத்தினர் தலைமையில், புதிய டில்லியில் சமீபத்தில் கூட்டப்பட்டு, அவர்கள் சிபார்சும், இந்திய சர்க்காருக்கு அனுப்பப்பட்டு, அவர்கள் ஆலோசனையில் இருந்து வருகிறது. எல்லா மாகாணங்களிலும் அரிசி, சோளம், கம்பு முதலிய உணவுப் பொருள்களின் விலையை, எவ்விதம் கட்டுப்படுத்தலாமென்பதுபற்றி, இந்த மகா நாட்டார் ஆலோசித்து முடிவு செய்து, தங்கள் சிபார்சை, சர்க்காருக்கு அனுப்பி இருக்கிறார்கள். மேலும் உளுந்து, துவரை, பாசிப்பயறு முதலிய பருப்புக்களின் விலைகளையும் கட்டுப்படுத்துவதென இந்திய சர்க்கார், முடிவு செய்திருக்கிறார்கள் என்றும் தெரிய வருகிறது.

உபரி ஜில்லா குறைவுள்ள ஜில்லாக்களுக்கு உதவும்.

இனி நமது மாகாணத்தில் செய்திருக்கும் ஏற்பாட்டைப் பற்றிக் கவனிப்போம். சிவில் சப்ளை கமிஷனர் என்னும் ஒருவர் நியமிக்கப்பட்டு அவருக்குக் கீழ், தான்யம் வாங்கும் அதிகாரிகள், உபரியாயுள்ள ஜில்லாக்களில் வேலை செய்வதற்கு, நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மேற்படி கமிஷனர் ஒவ்வொரு ஜில்லாவிலும் உள்ள தானியத்தின் உயர்ந்த விலையை நிர்ணயித்தும், மாதா மாதம் எந்த அளவுக்கு சரக்குகளை விற்க வேண்டுமென்பதையும் நிர்ணயித்து விடுவர். இவர்களுடைய அனுமதி யில்லாமல், எந்த இடத்திலிருந்தும், நெல், அரிசி, ஏற்றுமதி செய்ய முடியாது. தானியம் வாங்கும் அதிகாரிகள், கூடிய வரையில் ஏற்கெனவே நெல், அரிசி, வியாபாரம் செய்தவர்களின் மூலமாகவே வாங்குகிறார்கள். தவிரவும், மிராசுதாரர்களிட மிருந்து நேரிலும் வாங்குகிறார்கள். உபரியாயுள்ள ஜில்லாக்களிட மிருந்து குறைபாடுள்ள ஜில்லாக்களுக்கு, அனுப்பப்படுகிறது. குறைபாடுள்ள ஜில்லாக்களில் கலெக்டர்களிடம் லைசென்ஸ் பெற்ற வியாபாரிகள் தான் வாங்கி அரசாங்கத்தாரால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு விற்கும்படி, அநுமதிக்கப் பட்டிருக்கிறார்கள். மேலும் அந்த ஜில்லாக்களிலுள்ள கூட்டுறவு சங்கங்களின் மூலமாகவும் நெல், அரிசி இறக்குமதி செய்யப்பட்டு, விற்பனை செய்யப்படுகிறது. சில ஜில்லாக்களில், சில தாலூக்காக்களில், தான்ய விளைவு உபரியாகவும் மற்றைய தாலூக்காக்களில், குறைவாகவும் இருக்கிறது. மேற்படி ஜில்லாக்களில், கலெக்டர்களே தாசில்தார்கள் மூலம் உபரியாயுள்ள தானியங்களை வாங்கி, குறைபாடுள்ள இடங்களில், அவர்கள் மூலம் விற்பனை செய்கிறார். உதாரணமாக திருநெல்வேலி ஜில்லாவில், ஸ்ரீவைகுண்டம், அம்பாசமுத்திரம், தென்காசி, முதலிய தாலூக்காக்களிலுள்ள உபரி தானியங்கள் வாங்கப்பட்டு, கோயில்பட்டி, சங்கரன் கோயில் முதலிய தாலுக்காக்களில் விற்பனை செய்யப்படுகிறது. கோயமுத்தூர் ஜில்லாவில் விவசாயிகளிடமிருந்து அதிகப்படியாக இருக்கும் உணவுப் பொருள்களைப் பெற, பின்வரும் திட்டம் போடப்பட்டிருக்கிறது. 2 முதல் 5 எக்கரா வரை நிலம் உள்ளவர்கள், தங்கள் மகசூலில் $\frac{1}{4}$ பாகத்தை சர்க்காருக்குக் கொடுக்கும்படி கேட்கப்படுவர். 5 முதல் 10 வரை உள்ளவர்கள், 3-ல் 1 பாகம், 10 முதல் 50 எக்கர் வரை உள்ளவர்கள் பாதி, 50 எக்கராவுக்கு மேல் உள்ளவர்கள் முக்கால் பாகம், இது நெல் சம்பந்தமான ஏற்பாடு. சோளம், ராகி, சம்பந்தப்பட்ட மட்டில், திட்டம் சிறிது மாறுதல் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டப் பிரகாரம், எங்கெங்கு அவசியமோ, அங்கெங்கெல்லாம், கிராமங்களில் தானியங்களை விநியோகிக்கும் பொறுப்பு, கூட்டுறவுச் சங்கங்களிடம் ஒப்படைக்கப்படும். இவை இல்லாத இடங்களில் பஞ்சாயத்து போர்டுகள் மேற்படி வேலையைக் கவனிக்கும்.

பங்கீடு முறையின் நன்மைகள்.

நமது மாகாணத்திலுள்ள பல முனிசிபல் நகரங்களிலும், அரிசிப் பங்கீடு முறையை அமுலுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஒவ்வொரு நகரத்திற்கும், ஒரு நகர பங்கீடு அதிகாரி, நியமிக்கப்பட்டிருக்கிறார். நகரத்திலுள்ள ஒவ்வொரு வீடுகளிலும் உள்ள, நபர்கள் அவர்களுக்குத் தேவையான அரிசியும், கணக்கெடுக்கப்பட்டு, பங்கீடுச் சீட்டுக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அரசாங்கத்தாராலேயே, மேற்படி நகரத்திற்குத் தேவையான அரிசி வரவழைக்கப்பட்டு அவர்களால் நகரில், பலபாகங்களில் நியமிக்கப்பட்டிருக்கும் வியாபாரிகளின் கடைகள் மூலம், நிர்ணயிக்கப்பட்டிருக்கும் விலைக்கு, விற்கப்படுகின்றது. பங்கீடுச் சீட்டுக்களை மேற்படி கடைகளில் கொண்டுபோய்க் காண்பித்து தங்களுக்கு ஏற்பட்ட பங்குகளை வாங்கிக் கொள்ளுகிறார்கள். சரக்குகள் வரத்து குறைவாக இருக்குங் காலத்தில், ஏழைகளே அதிக கஷ்டத்திற்கு உள்ளாகின்றனர். மேலே கண்ட விதம், பங்கீடு முறையை அனுஷ்டித்திருப்பது, எல்லாருடைய தேவைகளையும் பூர்த்தி செய்து, அவரவருடைய நியாயமான பங்கையும் பெறுமாறு செய்கின்றது. சென்னை அரசாங்கத்தார் முன் ஜாக்கிரதையாகவே சென்ற பிப்ரவரி மாதத்திலேயே தானியப் பங்கீடு விஷயத்தில், தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு, ஜில்லாக்களுக்குள் ஏற்றுமதி, இறக்குமதிகளைக் கட்டுப்பாடு செய்து, அவர்களே தானியங்கள் வாங்கும் வேலைகளையும், பங்கீடு செய்யும் வேலைகளையும் மேற்கொண்டார்கள். இதன் பயனாக நம் மாகாணத்தில் குறைபாடு உள்ள மலையாளம் முதலிய ஜில்லாக்களில் பஞ்சம் வராமல் வெற்றிகரமாகத் தடுக்கப்பட்டது.

பஞ்சம் தவிர்க்கப்பட்டது

இதற்கு மாறாக நம் தேசத்தின் கீழ்ப்பாகங்களில் உள்ள மாகாணங்களான, வங்காளம், ஒரிஸா, முதலியவைகள், உணவுப் பொருள்களைத் தாமே வாங்கி, வினியோகம் செய்வது அவசியமல்லவெனக் கருதி வாளா இருந்ததின் பயனாக, வங்காள தேசத்தின் பொருளாதார நிலைமை சீர் குலைந்து, பல ஜில்லாக்களி லிருந்து குடியானவர்கள், தங்கள் வீடுகளையும் நிலங்களையும் விட்டுப் பிரிந்து, நகரங்களுக்கு குடும்பத்துடன், போக நேர்ந்தது. இந்த நிலைமையையும் நம் மாகாண நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நம் மாகாண அரசாங்கத்தார், தானியங்களை வாங்கி வினியோகம் செய்யக் கையாளும் முறையானது, எவ்வளவு முக்கியமானதாகவும் பயனளிக்கக் கூடியதாகவும் இருக்கிறதென்பது, நன்றாக விளங்கும். சென்னை அரசாங்கத்தாரும், மற்றக் கீழ்ப் பிரதேச மாகாணங்களைப் போல் நடந்து கொண்டிருந்தால், நம் மாகாணத்திலுள்ள மலையாளமும், இதர மேற்கு ஜில்லாக்களும் பஞ்சத்தால் பீடிக்கப்பட்டு, இன்றையத் தினம் வங்காளம்போல், பரிதாபகரமான நிலைமையை அடைந்திருக்கும்.

போக்கு வரவுக் கஷ்டங்கள்

உபரியாக உள்ள மாகாணங்களிலிருந்தும், ஜில்லாக்களிலிருந்தும், குறைபாடுள்ள மாகாணங்களுக்கும் ஜில்லாக்களுக்கும் தான்யங்கள் ஏற்றுமதி செய்வதில் பலவித கஷ்டங்கள், ஏற்படுகின்றன. ரயில் போக்குவரத்தில், மிகக் காலதாமதம் ஏற்படுகிறது. யுத்தம் ஏற்பட்ட பிறகு, நிலக்கரி வரத்து, குறைந்தபடியாலும், யுத்தத்திற்காகத் தானியங்கள் ஏற்றிப் போகக் கூடிய வண்டிகள், பெரும்பாலும் வெளி நாடுகளுக்கு அனுப்பப்பட்டதாலும், வண்டிகளில் குறைவு ஏற்பட்டு விட்டது. இதன் விளைவாக, ரயில்வே ஸ்டேஷன்களில் கொண்டு வந்து சேர்க்கப்பட்ட மூட்டைகளைச் சீக்கிரம் ரயிலில் ஏற்றி அனுப்ப ஏற்பட்ட கால தாமதத்தினாலும், சென்ற அக்டோபர்-நவம்பர் மாதங்களில் பெய்த மழையினாலும், மூட்டைகள் பல நனைந்து கெடுதலாய்ப் போயின. இதனால், குறிப்பிட்ட வேளையில் சரக்குகள், குறைபாடுள்ள ஜில்லாக்களுக்குப் போய்ச் சேரத் தாமதம் ஏற்பட்டு விட்டது. அடுத்தபடியாக, கப்பல் மூலமாக அனுப்பப்படுவதற்கும் யுத்த காரணத்தினால் தானியப் போக்கு வரத்து உபயோகத்திற்கும் கப்பல்கள் கிடைக்க வில்லை. நாட்டு வண்டிகளில் அனுப்புவதற்கும் தூரப் பிரதேசங்களுக்கு மேற்படி வண்டிகள் மூலம் அனுப்புவதும் முடியாத காரியம். மேலும் மேற்படி வண்டிகளுக்கு உபயோகிக்கப்படும் மாடுகளும், அரிதாகிவிட்டன. ஏனென்றால் இவ்வருஷம், ஏற்பட்ட மாட்டுச் சீக்கினால், ஏராளமான மாடுகள், மடிந்து போயின. வண்டிகளுக்கு வேண்டிய இரும்புச் சாமான்களின் விலை ஒன்றுப் பத்தாகக் கூடி விட்டதால், வண்டிகள் நல்ல ஸ்திதியில் இல்லை. இக்காரணங்களினால், உள்நாட்டுப் போக்கு வரத்துக்களுக்கு இடையூறு ஏற்பட்டு, தான்யங்கள், சரிவர பங்கிடு செய்வதற்குக் காலதாமதம் ஏற்படுகிறது. சென்ற செப்டெம்பர் மாதத்தில், சென்னை அரசாங்கத்தார் இந்த மாகாணத்திலுள்ள நெல், அரிசிக்கு விலை உயர்ந்த பக்ஷமாக, எவ்வளவு கொடுக்க முடியுமோ, அதை நிர்ணயித்து, அதன்படி வாங்குவதென்றும், முடிவு செய்திருக்கிறார்கள். இந்த விலை அடுத்த செப்டெம்பர் மாதம் வரையில், அமுலில் இருக்கும்.

(11-ம் பக்கம் பார்க்க)

இங்கும், அங்கும் :

“இந்த யுத்தத்திற்குக் காரணமாக இருந்தவர்களையும், இந்த யுத்தத்தின் போது அட்டூழியம் செய்தவர்களையும், யுத்தம் முடிந்ததும், அந்தந்த தேச சர்க்கார்களிடம் ஒப்படைப்போம். அந்தந்த தேச சர்க்கார்கள், தங்கள் தங்கள் நாட்டு விதிப்படி அவர்களை விசாரித்து தண்டனை விதிப்பார்கள்” என்று நேசதேசத்தார்கள் அறிவித்தார்கள் அல்லவா? அப்புறம் ருஷ்யர்கள் அதற்கு மேலே ஒரு படி போய் விட்டார்கள். சில நாஜி சேனாபதிகளைப் பிடித்து விசாரணை செய்து, அவரவர்கள் தங்கள் தங்கள் வாயாலேயே தாங்கள் செய்த அதிக்ரமச் செயல்களை ஒப்புக் கொள்ளச் செய்து, நாச் சந்தியில் அவர்களைத் தூக்கிலிட்டு விட்டார்கள்.

இவற்றை யெல்லாம் பற்றி கேள்விப்பட்ட இதர நாஜிகளுக்கு, இப்பொழுது ஏக திகில் ஏற்பட்டிருக்க வேண்டு மென்பது நிச்சயம். போர்க்களத்தில் மடிவ தென்பது வேறே சமாச்சாரம். ஆனால் கோர்ட்டிலே கொண்டு நிறுத்தப்பட்டு, ஆயிரம் கேள்விகளுக்கு ‘ஆமாம்! ஆமாம்!’ என்று பதில் சொல்லி, அங்கிருப்பவர்கள் எல்லாம், ‘சீ! சீ!’ என்று காரி உமிழ்ந்து, கடைசியில் சிறையில் சில நாட்கள் தங்கி அவதிப்பட்டு, அப்பால் தூக்கு மேடையி லேற்றப்படுவது என்பது ஒரு தனி விஷயமல்லவா? இந்த அவஸ்தையை யார் தான் விரும்புவார்கள்.

இது நாஜிகளிடை நடுக்கத்தை உண்டாக்கி யிருக்கிறது என்பதற்கான ருஜுக்கள் நிறையக் கிடைத் திருக்கின்றன. போலந்திலே, இப்பொழுது பல நாஜிகள் தங்களிடமுள்ள ஆயுதங்களை போலந்து தேச பக்தர்களுக்கு விற்க முன் வந்திருக்கிறார்களாம். அந்த ஆயுதங்களுக்குக் காசு வாங்கிக் கொள்ளுவதோடு, ஒரு யோக்கியதா பத்திரமும் பெற்றுக் கொள்ளத் தவறுவ தில்லையாம். நாளை அவர்கள் விசாரிக்கப்பட்டால், அப்பொழுது காட்டலாமோ இல்லையோ இந்தப் பத்திரங்களை?

‘ஐயா! நான் என்னய்யா செய்கிறது? என்னைப் பொறுத்த வரை நான் மகா யோக்கியன். இந்தச் சண்டைக்கே வந்திருக்க மாட்டேன். ஆனால் இந்த எழவு ஹிட்லர் எங்களை விடமாட்டேன் என்று சொல்லி விட்டாரே! ஆகவே வேறே வழியில்லாமல் சண்டைக்கு வந்தேன். போலந்து தேச பக்தர்களின் இணையற்ற சேவையைப் போற்றி, எனது ஆயுதங்களைக் கூடக் கொடுத்தேனே ஐயா! நான் ஒரு பாவமு மறியாதவன்’ என்று கெஞ்சலாமோ இல்லியோ?

இது புதுக் கதையாக இருக்கலாம், ஆனால் அதே மனுஷனுக்கு ஒரு பழைய புராணமுமிருக்கலா மல்லவா? அதைக் கிளறி விட்டுவிட மாட்டார்களா ருஷ்யர்கள்? அப்பொழுது ஆசாமி தப்ப முடியுமா? தவறு செய்தவனும், அக்ரமம் செய்தவனும் தப்பவே முடியாது.

நேசதேச விமானிகள் ஆயிரம், இரண்டாயிரம் டன்கள் கணக்கிலே பெர்லின் மீது குண்டுகளை வீசிக் கொண்டிருக்கிறார்கள். சரித்திரத்திலேயே இதைப் போன்ற நாச வேலை எக்காலத்திலும் நடந்ததில்லை என்கிறார்கள். பாதி பெர்லின் பாழாகி விட்டதாம். இன்னொரு பாதியும் இனிச் செல்ல விருக்கும் சூரர்களுடைய குண்டுகளுக்கு இலக்காகலாம்.

நேசதேச விமானிகளின் பயங்கரக் குண்டு வீச்சினால் ஏற்படும் அவதி ஒரு புறம்; மற்றொரு புறம் சாமான்களைத் திருட்டுத் தனமாக விற்போரின் கூட்டம் அதிகரிப்பதால் ஏற்படும் துன்பம் ஒரு புறம். இரண்டிற்கு மிடையே, ஜனங்கள் அனலிடைப் புழுவாகத் துடிக்கிறார்களாம். ‘என் வந்து பிறந்தோம் இந்த தரித்திர நாட்டில்?’ என்று எண்ணி, மனம் புழுங்குவோர் லக்ஷக் கணக்கில் இருப்பார்கள் அங்கே.

பெர்லினிலிருந்து, ஸ்வீடன் தேசத்தைச் சேர்ந்த நிருபர் ஒருவர் உயிரோடு தன் நாட்டிற்குத் திரும்பி யிருக்கிறாராம். அவர் வெளியிட்டுள்ள விவரங்களைப் பார்த்தால், மூக்கின் மேலே கை வைக்கத் தான் தோன்றுகிறது.

மூன்று சிறு சாக்லேட் கட்டிகளுக்கு, இப்போது சுமார் 1,250 ரூபாய் பெறுமான ஒரு வைர புரூச்சைக் கழற்றிக் கொடுத்தாராம் ஒருவர். ஒரு பவுண்டு தேயிலைக்கு முந்நூற்று முப்பத்தைந்து ரூபாய் கொடுக்க வேண்டுமாம். அப்படிக் கொடுத்து, தேயிலை வாங்கி சாப்பிடா விட்டால் என்ன என்று கேட்க முடியுமா? நாக்கு கேட்கிறதே! ‘ஒரு ஸ்வீட்’ (இனிப்புப் பண்டம்) இரண்டரையணா, மூன்றணா ஆகி விட்டது என்பதற்காக, அதை வாங்கிச் சாப்பிடாமலிருக்கிறோமா ஐயா? வீசை இரண்டணா விற்ற கத்தரிக்காய், வீசை ஒண்ணேகால் ரூபாயாக உயர்ந்த போது கூட, மார்க்கெட்டில் மலை மலையாகக் கிடந்த கத்தரிக்காய் எல்லாம் மள மள வென விற்பனையாகிக் கொண்டு தானே இருந்தன? ஆனால், ‘அநியாயம்! அநியாயம்!!’ என்ற பாட்டை எல்லோரும் பாடிக் கொண்டு தானிருந்தார்கள். இதே போல, பெண்கள் அணியும் பூட்ஸ் ஒரு ஜோடி 15 பவுன், வாசனை சோப்பு ஒன்று 9 பவுன்; ஒரு முட்டை 2 பவுன்; ஒரு புட்டி பிராந்தி 7 பவுன் முதல் 40 பவுன் வரை என்றிருந்தால், இவற்றையெல்லாம் நியாயமான விலை என்று யாராவது சொல்லுவார்களா?

இன்னும் கேளுங்கள் கண்ணறாவியை! ஒரு பவுண்ட் வெண்ணெயைக் கொண்டு கொடுத்தால், இரண்டு பவுன் பத்து ஷில்லிங்கும், 20, 30 சிகரெட்டுகளும் கொடுக்கிறார்களாம். நல்ல சிகரெட்டாக 50 கொடுத்தால், ஆட்டு இறைச்சித் துண்டுகள் பத்தும், பன்றி இறைச்சியிலே பத்துப் பவுண்டும் தருகிறார்களாம்.

இந்த அழகிலே ஜனங்கள் எப்படி உயிர் வாழ்ந்திருப்பது? எப்படி வயிறு வளர்ப்பது? எப்படி காலத்தைக் கழிப்பது? கஷ்டம்! கஷ்டம்!!

நேசதேச விமானிகள் போடுகிற போட்டிலே, ரஸ்தாக்களும், போக்குவரத்து வண்டிகளும் பாழாகி விட்டதால், ஏற்பட்ட அவஸ்தை இதெல்லாம். இதெல்லாம் நாளடைவில் ஜெர்மானிய மக்களின் மனோதிடத்தைக் குலைக்காது விட்டுவிடுமென்று நினைக்கிறீர்களா என்ன? விமான குண்டு வீச்சுகளின் அடிப்படையான நோக்கங்களில் முக்கியமான இதுவாயிற்றே இது. தரைப் படைகள் முன்னேறி வந்து எதிரிகளின் இடங்களைக் கைப்பற்றினால் தான், அந்தந்தப் பிரதேசங்களில் சண்டை நின்றதாக அர்த்தம். ஆனால், வானத்திலிருந்து செய்யும் காரியம் தான், தரைப் படைகளுக்கு சௌகரியமான வழியை உண்டுபண்ணுகிறது.

இத்தாலியப் படையெடுப்பை எடுத்துக் கொள்ளுங்களேன். ஒரு இடத்திலே நேசதேச விமானங்கள் மிகக் கடுமையாக விடாது தாக்குகின்றன என்றால், அதிலே ஏதோ அர்த்தம் இருக்கிறது என்று தான் கொள்ள வேண்டியிருக்கிறது. அந்த இடம் கடற்கரையோரத்தில் இருந்து விட்டால், குண்டுவீச்சு நடந்ததும், நேசதேசப் படைகள் போய் இறங்கியிருக்கின்றன. விமானப் பாதுகாப்பு இல்லாமல் அந்தக் காரியமும் ஆவதில்லை. ஆகாயத்திலே யிருந்து சூடு கிளம்பப் போகிறதென்று, கப்பல்களுக்கு விமானக் குடை பிடிக்கிறார்கள். அப்படியே ஆகாயத்திலே சூடு கிளம்பிவிட்டால் (எதிரியின் வேட்டை விமானங்கள் வந்துவிட்டால்), அந்தச் சூட்டைச் சூட்டாலேயே தணிக்கிறார்கள். இப்படியாக நடந்து கொண்டிருக்கிறது நமக்குச் சாதகமான காரியங்கள் பல.

*   *   *   *   *

‘வைரத்தைக் கொண்டு வைரத்தை அறுக்க வேண்டும்’ என்று ஒரு பழமொழி உண்டே, நினைவிருக்கிறதா? அதை நினைவில் வைத்துக் கொண்டுதான், அரக்கான் போர்முனையில் நின்று போராடும் இந்திய, அமெரிக்க, பிரிட்டிஷ், சீனத் துருப்புக்கள் பலே காரியங்கள் பலவற்றைச் செய்து வருகின்றன.

ஜப்பானியர் தந்திரகாரக் குள்ளர்கள்; மாயா ஜாலக்காரர்கள் என்றெல்லாம் வர்ணித்திருக்கிறார்கள் பலர். வாஸ்தவம்! பலே திருடர்கள் கூடத்தான். காடுகளிலே மறைந்திருந்து போராடுவதிலே நல்ல அநுபவம் பெற்றவர்கள். அப்படிப்பட்ட ஒரு கோஷ்டியினரை எப்படித் தாக்குவது? தந்திரத்தால் தான்!

காடுகளிலே புதர்கள் இருக்குமல்லவா? அந்தப் புதர்களைக் கயிறுகளால் முதலில் அசைத்து விடுகிறார்களாம் நம்மவர்கள். ஏதோ போர் வீரர்கள் புதருக்குள் வருகிறாப்போலிருக்கு என்று மறைந்திருக்கும் ஜப்பானியர்கள் சுடத் தொடங்குகிறார்களாம். அதிலிருந்து அவர்கள் மறைந்துள்ள இடம் நம்மவர்களுக்குத் தெரிந்து விடுகிறதல்லவா? அப்புறம், குண்டுகளை வீணாக்காமல், குறிபார்த்து நொறுக்குகிறார்கள் நம்மவர்கள்.

இதுமட்டுமா? சினிமாக்களிலே, குதிரைகள் ஓடுவது போலவும், நாலு பேர்களை வைத்துக் கொண்டே பல்லாயிரம் பேர்கள் கைதட்டுவது போலவும், குயில், கிளி கத்துவதுபோலவும், நாய் குலைப்பது போலவும், போலி சப்தத்தைப் பெருக்கி, உண்மைபோலிருக்கச் செய்து விடுகிறார்களல்லவா? இந்த முறைப்படி, நமது வீரர்கள், அரக்கானிலே, காலி தகர டப்பாக்களை நிறைய உருட்டிவிட்டு, காலாட்படைத் தாக்குதல் போல ஒலியைக் கிளப்பிவிட்டு விடுகிறார்களாம்.

ஜப்பானியர் ஏமாந்துபோய், பீதியுற்று, சின்னபின்னப்பட்டுச் சிதறி ஓடுகிறார்களாம் நாலாபுறமும். ஆனாலும் அவர்கள் கடுமையாகவே சளைக்காமலே போராடுகிறார்களாம். நமது படை வீரர்கள் மனோதிடத்துடன், ஜப்பானியரைப் பாய்ந்து அட்டகாசம் செய்ததன் பயனாகவே, மாங்டாவை நோக்கி அவர்கள் முன்னேற முடிந்தது.

மாங்டா பாதைக்கு முன்னால் உள்ள ஜப்பானியப் படைகளை நம்மவர்கள் சூழ்ந்து கொண்டு விட்டார்களாம். ஜப்பானியர் யாரும் இனித் தப்ப முடியாதாம், ஒரு நாள் நல்ல இருட்டிலே, ஒரு ஜப்பானிய கோஷ்டியினர் தப்பி ஓட முயன்றார்களாம், அவர்களிலே நாலு பேர்கள் மண்ணைக் கௌவ நேர்ந்ததாம். ஜப்பானியர் தப்பிச் செல்ல ஜலமார்க்கம் இருக்கிறது. அதையும் பிரிட்டிஷ் படைகள் கவிந்து கொண்டிருக்கின்றன. எதிரிக்கு ஏகச் சேதம். நம்மவர்களோ உற்சாகத்தோடு முன்னேற முயன்று கொண்டே யிருக்கிறார்கள்.

மாங்டா நம்வசம் வந்த பிறகு, எங்கே போராடலாம் என்று வேவு பார்த்து வருகிறார்களாம். அந்த மலைப் பிரதேசத்தில் உள்ள ஜனங்கள், நேசதேசப் படைகள் மீது தேவதாளி பாசத்துடன் இருந்து வருகிறார்களாம். அவர்கள் அளித்த உதவியை நேசதேசத்தவர் எந்நாளும் மறக்கமுடியாது. பல ஆபத்தான இடங்களில் ரஸ்தா போட அவர்கள் ரொம்பவும் உதவி செய்கிறார்களாம்.

(5-ம் பக்கம் தொடர்ச்சி.)

முழுகடிக்கப்பட்டன என்று ஒரு பொய்க் கணக்கைக் கூறினார். எதற்காக இந்தப் பொய்க் கணக்கு கூறப்பட்டது என்ற விஷயம் அவர் அடுத்தாற்போல் கூறியதிலிருந்து வெளியாகிறது. ஷிமாடா கூறுகிறார், “அமெரிக்கர்களுக்கு இன்னும் அதிகமான ‘ரிசர்வ்’ கப்பல்கள் இருக்க வேண்டும் என்று நாம் யூகிக்க வேண்டும். முழுகடிக்கப்பட்ட கப்பல்களுக்குப் பதிலாக புதிய கப்பல்கள் கட்டி, நஷ்டத்துக்குச் சரிக்கட்டி விடுவார்கள் என்று நினைக்க வேண்டி யிருக்கிறது. ஆகையால், இனிமேலும் கடுமையான கடற் போரை நாம் எதிர் பார்க்க வேண்டும்.” ஷிமாடா கூறியதில் ஒரு தந்திரம் இருக்கிறது, அதாவது, அமெரிக்கர்கள் எவ்வளவு விரைவாக கப்பல்கள் கட்டுகிறார்களோ, அவ்வளவு விரைவாக ஜப்பானியர்கள் அவைகளை முழுகடித்து விடுகிறார்கள் என்ற அபிப்பிராயம் பரவ வேண்டும் என்பது அவருடைய நோக்கம். ஆனால் உண்மை என்ன? தென் பசிபிக் பிரதேசத்தில் நேச தேசத்தார்களுக்குத் தான் கடற் படை பலம் மிகுந்து கொண்டு வருகிறது. ஷிமாடா வெளி நாடுகளுக்காகச் சொன்ன பிரசார வார்த்தைகள் உண்மையற்றவை என்பதை, இப்போது கடற் படை பலத்தினால் நேசதேசத்தார் பெற்று வரும் வெற்றிகள் விளக்கிக் காட்டுகின்றன.

ஹிட்லருடைய புது வருஷச் செய்திகள்

ஆரம்பத்தில், ஜெனரல் டோஜோவின் புதிய வருஷச் செய்தியைப் பற்றிக் குறிப்பிட்டோம். முடிவாக, அவருடைய கூட்டாளியாகிய ஹிட்லருடைய புது வருஷச் செய்தியையும் பழைய வருஷச் செய்திகளையும் சுருக்கமாகக் குறிப்பிடலாம்:

ஜனவரி 1939-ல் போலந்தோடு ஜெர்மனி செய்த நட்புரிமை உடன்படிக்கையை ஹிட்லர் போற்றினார். சமாதானத்தை விரும்புபவர்கள் இதனுடைய முக்கியத்தை ஒப்புக்கொள்ளுவார்கள் என்றார். ஆனால் எட்டு மாதங்களுக்குப் பிறகு, அதாவது செப்டெம்பர் 3-ந் தேதி, அந்த உடன்படிக்கையை உடைத்து உலக யுத்தத்தை ஆரம்பித்தார்.

ஜனவரி 1940-ல், “ஜெர்மனி ஜீவிக்கப் போகிறது, வெற்றி யடையப் போகிறது” என்று கூறினார். ஒட்டப் பந்தயத்தில் தான் இப்போது வெற்றியே ஒழிய வேறெதிலும் இல்லை.

அடுத்த வருஷ ஆரம்பத்தில், “1941-ம் வருஷம் ஐரோப்பிய புதிய நல்வாழ்வுத் திட்டத்துக்கு மிக முக்கியமான வருஷமாகும்” என்றார். ஆனால் நடந்ததோ அதற்கு நேர்மாறானது!

1942 ஜனவரியில், ‘இந்த வருஷம் மகத்தான வெற்றிகளடையும் வருஷ மாகும்’ என்று கூறினார். அந்த வருஷம் நடந்த விஷயங்கள் அவருடைய மனத்தை அடியோடு கலக்கி யிருக்க வேண்டும். ஏனென்றால் அடுத்த வருஷ ஆரம்பத்தில், அதாவது 1943-ல், அவர் வழக்கமாக விடுக்கும் புது வருஷச் செய்தி தலைகாட்டவே யில்லை!

1944-ல், அதாவது நான்கு நாட்களுக்கு முன் விடுத்த புது வருஷச் செய்தியில், “1944-ம் வருஷம் மிகக் கஷ்டமான வருஷமாகும். நாம் கடுமையாகத் தாக்கவேண்டும். முடிவில் எந்த தேசம் வெற்றிக்கு நியாயமாக உரியதோ, அந்த தேசத்துக்குத்தான் கடவுள் வெற்றி யளிப்பார்,” என்று கூறியிருக்கிறார். உண்மை தான். ஆனால் வெற்றி யடையப் போவது ஒரு தேசமல்ல, பல தேசங்கள்.—சுதந்திரத்துக்காகவும் மக்கள் நல் வாழ்வுக்காகவும் போராடும் நேச தேசங்கள். இதை ஹிட்லரும், டோஜோவும் தம்முடைய உள்ளத்தில் உணர்ந்திருக்கிறார்கள். (சென்னை வானொலி நிலையத்திலிருந்து ஒலி பரப்பப்பட்ட ஒரு பேச்சு.)

'நல்லகாலம் பிறக்குது!

'நல்ல காலம் பிறக்குது! நல்ல காலம் பிறக்குது! உலகத்துக்கே நல்ல காலம் பிறக்குது! ஜெர்மன் மக்களுக்கும் நல்ல காலம் பிறக்குது! உங்களுக்கும் நல்ல காலம் பிறக்குது! மேற்கே யிருந்தும் கிழக்கே யிருந்தும் நல்ல சேதிகள் வரப் போகுது! ஐயோன்னு போப் போறான் ஒரு அநியாயக்காரன்' என்று கூவிக் கொண்டே ஒரு குடுகுடுப்பைக்காரன் பொங்கலன்று காலையில் மாம்பலத்துத் தெருக்களிலே தோன்றினான். எதுடா இது காலங் கெட்டுப் போச்சுதே! குடுகுடுப்பைக்காரன் தனி மனுஷனுக்கு நல்ல சேதி சொல்லிக் கொண்டு வந்தது போய், உலகத்திற்கே நல்ல சேதி சொல்ல வந்து விட்டானே என நினைத்தோம். 'மேற்கே யிருந்து நல்ல சேதி வரப் போகுது' என்று அவன் என்ன கணக்கில் சொன்னானோ தெரியவில்லை.

'போன சனிக்கிழமை யன்று இத்தாலியிலே, ரோமாபுரிக்கு முப்பத்திரெண்டு மைல் தென் மேற்கே உள்ள ஒரு துறைமுகத்திலே, பிரிட்டிஷ், அமெரிக்கப் படைகள் பல கப்பல்களில் போயிறங்கி விட்டன; ஆரம்பத்தில் எதிர்ப்பே இல்லை. இறங்கிய இடத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, அப்படைகள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. ஐந்தாவது படையின் மூல சைனியத்திற்கும், இப்பொழுது நேசப் படைகள் இறங்கிய இடத்திற்கும் நடுவே காக்கை பறக்கும் தூரமாக ஐம்பது மைல்கள் கூட இருக்காது, வசந்த காலத்தில் ரோமாபுரியில் இருப்போம் என்று ஒரு ராணுவத் தலைவர் சொன்ன சொற்கள் உண்மையாகி விடும் என்றே தோற்றுகின்றது' என்ற சேதிகள் தினசரிப் பத்திரிகைகளில் வந்தபோது, குடுகுடுப்பைக்காரன் சொன்னது பலிக்கிறுப்போலிருக்கிறதே என்றே தான் பலர் நினைத்திருப்பார்கள்.

ஜெர்மானியருக்கே இந்தச் சேதிகள் பெரிய திகைப்பை மூட்டி யிருக்கும் என்று நினைக்கிறேன். அவர்கள் இத்தகைய படையெடுப்பை இப்பொழுது எதிர் பார்க்க வில்லை போலிருக்கிறது. இத்தாலியின் மேல் கரையில் ஐந்தாவது சேனையும், கீழ் கரை யோரமாக எட்டாவது சேனையும் வருகின்றனவே, அவ்வளவே தான் நேச தேசத்தாரின் போர்த் திட்டம் என்று ஜெர்மன் சேனாபதி நினைத்துக் கொண்டார் போலிருக்கிறது.

நேபிள்ஸ் துறைமுகத்திலிருந்து பெரிய கப்பற் படையொன்று புறப்பட்டு, வடக்கே போய், மளமளவென துருப்புகளை இறக்கியிருக்கிறது. மேற் கொண்டும் யுத்தத்திற்குத் தேவையான சாமான்களைக் கொண்டு போய் பல கப்பல்கள் இறக்கிய வண்ணமாக இருக்கின்றன. இப்பொழுது ஐந்தாவது படை இருக்கும் பிரதேசத்திலே உள்ள ஜெர்மானியருக்கு முன்னும் பின்னும் நேச தேசத் துருப்புக்க ளிருக்கின்றன. அவர்கள் பாடு, இடுக்கியில் அகப்பட்ட புழு மாதிரித் தான் இனி.

ஆனால் ஜெர்மானியர்கள் லேசுப்பட்டவர்கள் அல்ல. அதனால் தான் நேச தேச சேனாபதிகள் உஷாராகவே காரியங்களை நடத்துகிறார்கள். ஏற்கெனவே ஜெர்மன் விமானங்கள் நேச தேசக் கப்பல்களைத் தாக்கத் தொடங்கி விட்டன. பல ஜெர்மன் விமானங்களும் நேச தேச குண்டுகளுக்குப் பலியாகி விட்டன 'இன்னும் 48 மணி நேரத்துக்குள், புதிதாக நாம் இறங்கிய பிரதேசத்திலே கடும் போர் மூளலாம்' என்று ஒருவர் கூறி யிருக்கிறார் மூன்று நாட்களுக்கு முன்பாகவே.

ரோமாபுரிக்கு 28 மைல் தூரத்தில் போய் விட்டார்கள் என்பதால், நேச தேசப் படைகள் ஒரு மணி நேரத்தில் ரோமாபுரியை அடைந்து விடுவார்கள் என்று சொல்லிவிட முடியாது. அங்கே மலை ஒரு பக்கம், சதுப்பு நிலம் ஒரு பக்கம். ரோமாபுரிக்கு செல்லும் பாதையோ ரொம்பக் குறுகலானது. எங்கும் ஜெர்மானியர் நிறைந்திருக்கிறார்கள். யுத்தத்தை நீடிக்க வைப்பதில் தான் அவர்களுக்கு இப்பொழுது சிரத்தை. ஆகவே, நேச தேசப் படைகளின் முன்னேற்றம் எளிதான காரியமாக இருக்கும் என்று நினைக்க வில்லை நாம், ஆனால், அது எவ்வளவு கடுமையான காரியமாக இருந்தாலும் நம்மவர்கள் விடுவதாகவும் இல்லை. இனிமேல் ஜெர்மானியர் வெற்றி பெறுவது, நம்மவர்கள் விட்டுக் கொடுப்பது என்ற பேச்சே கிடையாது. ஆயினும், நேச தேசப் படைகள் இப்படி எதிரியின் வரிசைக்குப் பின்னால் போய் இறங்கியிருப்பது, இத்தாலியப் போர் சீக்கிரமே முடியலாம் என்பதற்கான அறிகுறி என்றே கொள்ளலாம்.

ஐந்தாவது சேனைக்கு இப்பொழுது சரியான வேலை இருக்கிறது. எட்டாவது சேனையோ, ரோந்து வேலைகளோடு நின்று கொண்டிருக்கிறது. பருவ நிலை சரியாக இல்லை பாருங்கள்!

ரோமாபுரிக் கருகே பல விமானக் கூடங்க ளிருந்தன. அவற்றில் ஒன்றைத் தவிர மற்றவற்றை உபயோக மற்றதாகச் செய்து விட்டார்களாம் நேச தேச விமானிகள். அது காரணமாகவே, நேச தேசப் படைகள் இத்தாலியில் புது இடத்தில் வந்து இறங்கியபோது எதிர்ப்பில்லாது போயிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

வாஸ்தவம்! நேசதேசப் படைகள் எங்கு போய் இறங்குவதானாலும், 'யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே' என்பது போல முதலிலே விமானப் படையெடுப்பு இருக்கிறது. ஆங்காங்கே உள்ள விமான நிலையங்களை த்வம்சம் செய்கிறார்கள். அதை யெல்லாம் எதிரிகள் சரிப்படுத்திக்கொண்டு கிளம்பு முன், நேசதேசப் படைகள் போய் இறங்கி விடுகின்றன கரையில்.

இதே போல் தான், மேற்கு ஐரோப்பாவிலும் இரண்டாவது போர் முனையை ஆரம்பிக்கப் போகிறார்களாம். அதற்கு வேண்டிய கப்பல்களை ஏராளமாகச் சேர்த்து வைத்துக் கொண்டாயிற்றாம். குறிப்பிடப்படும் இடத்திலே படைகளைக் கொண்டு இறக்க, அவை 'ரெடி'யாம். ஐஸன்ஹோவர் சீமைக்குப் போய் விட்டார். பிரதம மந்திரி சர்ச்சிலும் படையெடுப்பின் இறுதி ஏற்பாடுகளைத் தானே பார்க்க சீமைக்குத் திரும்பி விட்டார். இது வரை சரித்திரத்திலேயே கண்டும், கேட்டு மிராத அவ்வளவு பெரிய தோர் ஆகாய விமானப் படையை ஐரோப்பா மீது அனுப்பப் போகிறார்களாம். அவை போடுகிற போட்டிலே, எல்லா இடங்களும் சட்னியாகி விடப்போகிறது. எதிரி விமானங்கள் தலை காட்டவே முடியாது போய் விடும். அப்புறம் பல லக்ஷக்கணக்கான வீரர்கள், உலக க்ஷேமத்தைக் கோரி, பிரமாதமான தியாக சிந்தனையுடன், தம் உயிர்களையும் ஒரு பொருட்டாக மதியாது, ஐரோப்பாவில் போய் இறங்கப் போகிறார்கள்.

இதெல்லாம் கட்டாயம் நடக்கப் போகிறது என்பது ஹிட்லருக்குத் தெரியும். அவர், நார்வேயில் உள்ள பொம்மைத் தலைவரை வர வழைத்து, 'நேசதேசத்தாரின் படையெடுப்பை எதிர்க்க என்னென்ன செய்திருக்கிறீர் ஐயா?' என்று கேட்டாராம்.

'எல்லாம் தயாராகவே இருக்கிறது!' என்ற பதிலை அவர் அளித்திருக்கக் கூடும்.

'நேசதேசத்தாருக்கு சுகமாக வழிவிட எல்லாம் தயாராக இருக்கிறது' என்று கூட அதற்கு அர்த்தம் செய்து கொள்ளலா மல்லவா?

பெர்லின் நகரம் நேசதேச விமானிகளால் தூளாக்கப்படுவதையும், லண்டன் நகர வாசிகள் நிம்மதியாகத் தூங்குவதையும் அறிந்த ஜெர்மன் மக்கள் தன்னை இகழப் போகிறார்களே என்ற பயமோ என்னமோ, கொயரிங் துரைக்கு. தொண்ணூறு விமானங்களை, போன வாரம் லண்டன் நகரைப் பார்த்து விட்டு வர அனுப்பினார். அவற்றில் சில லண்டன் நகரைப் பார்த்து விட்டு அங்கேயே கீழேயும் இறங்கி விட்டன. லண்டனில் சொற்ப சேதம் ஏற்படத் தான் செய்தது. ஆனால், ஆயிரக் கணக்கான அமெரிக்க, பிரிட்டிஷ் விமானப் படையெடுப்பு எங்கே! தொண்ணூறு விமானங்களின் படை யெடுப்பு எங்கே! ஏக வரட்சியாக ஆகி விட்டாப் போலிருக்கு! இல்லை! ஒரே படியாக அனுப்பினால், ஒரே படியாக கோவிந்தா ஆகி விட்டால் என்ன செய்வது என்ற பயமிருக்கலாம். இன்னும் கடும் போர்கள் பல நடத்த வேணுமே! கழுத்துக்கே வரப்போகிறதே அவஸ்தை!

ருஷ்யாவில் ஜெர்மானியர் படும் அவஸ்தைகளைப் பற்றி எழுதத் தொடங்கினால், பதினாயிரம் பக்கங்கள் வேண்டி யிருக்கும். சரியாக ஒரு வருடத்திற்கு முன்பாக லெனின்கிராட் நகர முற்றுகை அகன்றது. அப்புறம் அந்தத் திசையிலே ருஷ்யர்களும் ஏதும் செய்ய வில்லை. ஜெர்மானியரும் அதிகம் வாலாட்ட வில்லை. தெற்கே காவு கொடுப்பதற்கே அவர்களுக்குச் சரியாக இருந்ததே! வடக்கே அதிகப் படைகளை அனுப்ப முடிந்ததா என்ன?

ருஷ்யர்கள் தான் காட்டு வெள்ளம் போல், எல்லாவற்றையும் அடித்து உருட்டிக் கொண்டு முன்னேறத் தொடங்கி விட்டார்களே! இப்பொழுது தரை கெட்டியாகி யிருக்கிறது. இது தான் சமயமென ஒரு பெரும் படை குபீரென்று பாய்ந்து விட்டது. பல ஊர்களைப் பிடித்தது. உக்ரமான போர்கள் இங்கு நடந்து கொண்டிருக்கின்றன. லெனின்கிராடிற்குத் தெற்கே பதினேழாவது மைலிலே, புஷ்கின் என்றொரு நகரம் இருக்கிறது. முந்நாளிலே, ருஷ்ய சக்ரவர்த்திகள் சுகத்தை விரும்பி, கோடை காலங்களில் இந்த நகரில் தான் வசித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களது பிரமாண்டமான வாசஸ்தலங்கள் இங்கிருந்தன. அவற்றை ஜெர்மானியர் உருப்படியாக வைக்க வில்லை. இப்பொழுது இந்த புஷ்கின் நகரை விட்டு ஓடி விட்டார்கள் ஜெர்மானியர்.

ருஷ்யர்கள் பலரை ஜெர்மானியர் பலவந்தப் படுத்தி வேலை செய்யச் சொல்லுகிறார்களாம். ரயில் பாதை யோரத்தில் எல்லாம் அகழிகளை வெட்டச் சொல்லுகிறார்களாம். டாங்கிகளைக் கவிழ்க்க குழிகள் தோண்டச் சொல்லுகிறார்களாம். எங்கு பார்த்தாலும் ஏராளமான யந்திர பீரங்கிகளை வைக்கச் சொல்லுகிறார்களாம். பல இடங்களில் பனிக்கட்டிகளுக்குக் கீழே சுரங்க வெடிகளைப் புதைத்து வைக்கிறார்களாம். இத்தனையையும் ருஷ்யர்கள் சமாளித்துக் கொண்டு முன்னேறுகிறார்கள் என்றால், அவர்களது தேச பக்தியையும், திட மனசையும், நிகரிலா வீரத்தையும் தனியாக எடுத்துக் கூற வேண்டுமா?

இருபது மைல் 'கனத்திலே' பல விதமான பாதுகாப்பு ஏற்பாடுகளை ஜெர்மானியர் செய்து வைத்திருக்கிறார்களாம். ருஷ்யர்களின் விமானப் படைகளும் சரி, நெடுந்தூரம் சுடும் பீரங்கிகளும் சரி, கூடவே வந்து கொண்டிருக்கின்றனவாம். என்ன செய்வார்கள் ஜெர்மானியர்கள்?

அவர்களுக்கு ஒரே குழப்பமும், திகைப்பும், பலஹீனமும் ஏற்பட்டு, நின்று போராடி மாளுவதா? பின் வாங்கி, ருஷ்யரால் சூழப்பட்டு அவமானத்தோடு மடிவதோ? என்ற பிரச்னைகளுக்குப் பதிலே சொல்ல முடியவில்லை.

தெற்கேயோ, ருஷ்யப் படைகள் வெகு தூரம் முன்னேறி விட்டன. கெர்ச் ஜலசந்திக்கு அருகே ருஷ்யப் படைகள் கிரைமியாவில் இறங்கி விட்டனவாம். அங்கும் ஜெர்மானியரது எதிர்ப்பு பலமாக இருக்கிறதாம். இன்னொரு ருஷ்யப் படை நேரே மேற்கே புயலெனப் போய்க் கொண்டிருக்கிறது. மேற்கே இரண்டாவது போர் முனை ஆரம்பமாகி விட்டால், ஹிட்லர் பாடு ரொம்ப சிரமம். எத்தனை முனைகளைக் கவனிப்பார் அவர்? எங்கென்று ஆட்களையும், ஆயுதங்களையும் அனுப்புவார்? கட்டாயம் தோற்கப் போகிறோம் என்ற எண்ணமே அவரது பலத்தை ஒடுக்கி விடுமே! இப்பொழுது, ஸ்டாலினைப் போலவோ, சர்ச்சில், ரூஸ்வெல்ட் போலவோ, தைரியமாக உட்கார்ந்து ஹிட்லரால் திட்டங்கள் போட முடியுமா என்ன?

மாஸ்கோவிலே, யுத்த நிலைமையே மாறிவிட்டது, ருஷ்யாவிலே யுத்தமே நடக்காத சமயத்தில், மாஸ்கோ எப்படி யிருக்குமோ, அத்தகைய கோலத்தி லிருக்கிறதாம் அந் நகரம். சங்கீத நடன சாலை ஒன்று போன வாரம் திறக்கப்பட்டதாம். அங்கு ஏகக் கூட்டமாம். எங்கும் பிரமாதமான வெளிச்சமாம், பூமிக்கடியில் ஓடும் ரயில்கள் ஓடத் தொடங்கி விட்டனவாம்.

'யுத்தம் தானாகப் போகிற தினுஸில் போய், நமக்கு சாதகமாகவே முடியும். ஸ்டாலின் கட்டாயம் நமக்கு வெற்றியைச் சம்பாதித்துத் தருவார்' என்ற திட நம்பிக்கை ருஷ்யர் எல்லோருக்கும் ஏற்பட்டுவிட்டது எதிர் காலத்தைப் பற்றிக் கவனிக்கத் தொடங்கி விட்டார்கள் அவர்கள். சீமையிலும் சர்வ தேசக் கமிட்டி மும்முரமாக வேலை செய்யத் தொடங்கி விட்டது ஜெர்மனி திடீரென்று சரணடைந்தால், அதற்கு என்னென்ன நிபந்தனைகள் விதிக்கவேண்டும்? அதை யார் யார், எப்படி எப்படி ஆளவேண்டும்? அவ்வப்பொழுது விடுவிக்கப்படும் நாடுகளை என்ன செய்ய வேண்டும்? என்பது பற்றி யெல்லாம் தீர்க்கமாக ஆலோசனை செய்து, விவரமாக முடிவு கட்டி வைத்து விடத் துணிந்து விட்டார்கள் அவர்கள். ஐரோப்பிய யுத்தம் முடிந்தால், ஐரோப்பாவிற்கே நல்ல காலம் பிறப்பது போல் தான். ஹிட்லருடைய முடிவும் அதோடு தெரிந்து விடும். அப்புறம் அவருடைய மூளைக்கு அநாவசியமான வேலைகளேதும் கொடுக்க மாட்டார்கள் நேச தேசத்தார்கள். அப்பால் ஜெர்மன் மக்களுக்கும் நல்ல காலம் தானே? தங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டு, சிவனே என்று இருப்பார்களல்லவா அவர்கள்?

வானொலி மூலம் செஞ்சிலுவைப் பிரசாரம்

அடுத்த பிப்ரவரி மாதம் 1-ம் தேதி முதல் இரண்டு வாரத்திற்கொரு முறை செவ்வாய்க்கிழமை ஸில மாலை 7-45 மணிக்கு செஞ்சிலுவைச் சங்கம் பற்றிய நாடகங்களும் பாட்டுக் கச்சேரிகளும் நடக்கும்.

பார்வை யிழந்த படையினருக்குப் பயிற்சி சாலை

டேராடூனில் செண்ட் டன்ஸ்டன்

டேராடூனில் 'செண்ட் டன்ஸ்டன்' மாணவர் விடுதியும் பயிற்சி சாலையும் சமீபத்தில் ஆரம்பமானது. யுத்தத்தினால் கண்ணிழந்த படையினர், பயன்படத் தக்க குடிகளாவதற்கு இது சந்தர்ப்ப மளிக்கிறது.

செண்ட் டன்ஸ்டன் ஸ்தாபனப் பிரதிநிதியான லெப்டினெண்ட் கர்னல் சர் க்லுதா மெக்கென்சி இந்தியாவில் இதை ஆரம்பித்தார். சென்ற மே மாதம் இவரே தன் கண் இழந்தார். 1943-ம் வருஷ மத்தியில் இந்த ஸ்தாபனமும் ஆரம்பமானது.

ஏற்கெனவே கண்ணிழந்த சுமார் 20 சிப்பாய்கள் பயன் படத்தக்க கைத்தொழில்களை இங்கே பயின்று கொண்டு வருகிறார்கள். இமயமலைச் சாரலை யடுத்த, இன்பகரமானதோர் காட்டுக்குப் பக்கத்திலுள்ள ஓர் விடுதியில் இந்த மாணவர் விடுதி அமைந்திருக்கிறது. இங்கே தான், மேற்குப் பாலைவனத்தில் கைது செய்யப்பட்ட இத்தாலிய உத்தியோகஸ்தர்களா யிருந்த யுத்தக் கைதிகளை முன்பு காவலில் வைத்திருந்தார்கள்.

இவர்களுக்கு இங்கே விசேஷப் பயிற்சி யளிக்கப்படுகிறது. அதன்படி, அவர்கள் பத்திரிகைகளும் புத்தகங்களும் படிக்கலாம். இவர்களுக்குப் பலவகைக் கைத்தொழில்களும் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. தம் பொழுது போக்குக்காக இந்தக் கைத்தொழில்களை அவர்கள் பிற்காலத்தில் செய்யலாம்; அல்லது தம் உபகாரச் சம்பளத்தோடு உப வருவாய் தேடும் பொருட்டு, தொழிலாகவே நடத்தலாம். அன்றியும் தனித்துத் தாம் எப்படிப் பிரயாணம் செய்வதென்றும், தம் கையாலேயே எப்படி உணவை எடுத்துச் சாப்பிடுவது என்றும் கற்பிக்கப்படுகிறார்கள்.

அவர்களுடைய உடல் நிலைபற்றி விசேஷ அக்கரை எடுத்துக் கொள்ளப்படுகிறது. வலி ஏதேனு மிருந்தால், அதற்கு உடனே வைத்தியம் செய்யப்படுகிறது. சிறிதளவு பார்வை யிருந்தாலும், மீண்டும் கண் பார்வை யடையும்படிச் செய்ய முயற்சிக்கப்படுகிறது. தழும்புகளையும் வெட்டுக்களையும் போக்குவதற்கு ஒட்டு ரண சிகிச்சை செய்யப்படுகிறது.

கண்ணிழந்த இந்திய சிப்பாய்களின் எண்ணிக்கை கொஞ்சந் தான். முதலில் சேர்த்துக் கொள்ளப்பட்ட 47 கண்ணிழந்த சிப்பாய்களில் 19 பேர்கள் தான் வந்து சேர்ந்திருக்கின்றனர். 5 பேர்கள் எதிர் பார்க்கப்படுகின்றனர். அநேகர் தம் சொந்த ஊர்களிலேயே தம் குடும்பத்தாரோடு இருந்து விடவே விரும்புகிறார்கள். தம் நெருங்கிய உறவினரை விட்டு விலகி யிருக்க அவர்கள் விரும்புவதில்லை. கண்ணிழந்த சில சிப்பாய்களின் குடும்பங்கள் வசிப்பதற்கும், இந்த ஸ்தாபனத்தில் இடங் கொடுக்கப்பட்டிருக்கிறது.

கண்ணிழந்த எந்த சிப்பாயாவது, உடற் கஷ்டப்பட்டு பயிற்சி பெற முடியாதபடி வயதானவரா யிருந்தாலும், தம் சொந்தக் கிராமத்தை விட்டு வரக் கூடாதென்று உறுதி செய்து கொண்டிருந்தாலும், அவர்களுக்கும் பொருளுதவி செய்வது பற்றி ஆலோசிக்கப்படும்.

இங்கிலாந்தைப் போலவே, இந்தியாவில் நடைபெறும் இந்த டன்ஸ்டன் மாணவர் விடுதியும் பொது மக்கள் தாமாகவே கொடுத்துதவும் பொருளைக் கொண்டு தான் நடை பெறுகிறது. சென்ற வருஷம், சமரச நாள் ஆண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற நடனத்தன்று ரூ. 2,000 வசூலானது. கான்பூரிலுள்ள ஒரு கம்பெனியார் ஒரு 'பேல்' பருத்தி நூல் கொடுத்துதவினார்கள். இதை அந்த கண்ணிழந்த சிப்பாய்கள் உபயோகப்படுத்தினர்.

(4-ம் பக்கம் தொடர்ச்சி.)

விமானங்கள் வெடிகுண்டுகள் எறியும் பலத்தை விளக்க கீழ்க்கண்ட புள்ளிகள் உதவும் :—

ஊர் பெயர்.	மாதம்.	எறியப்பட்ட வெடி குண்டு.	ஒரு நிமிஷத்திற்கு எத்தனை டன் ?
ல்யூபெக் ..	மார்ச்சு, 42.	300	2
கொலோன் ..	மே, 42.	1,500	16·7
செண்ட் நஸேர் ..	பிப்ரவரி, 43.	1,000	22
ஈஜென் .. .	எப்ரல் 43.	1,000	25
டுயிஸ்பரோ ..	மே, 43.	1,350	30
டார்ட்மண்ட் ..	மே, 43.	2,000-க்கு மேல்	34
டசல்டார்ப் ..	ஜூன், 43,	2,000,க்கு மேல்	34
ஹாம்பர்க் ..	ஜுலை, 43.	2,500	46
எஸ்ஸென் ..	ஜுலை, 43.	2,000	40
பெர்லின் ..	செப்டம்பர், 43.	1,000	50
பெர்லின் ..	நவம்பர், 43.	2,300	50-க்கு மேல்
பெர்லின் ..	டிசம்பர், 43.	2,000	50-க்கு மேல்
பிராங்க்பர்ட் ..	டிசம்பர், 43.	2,000	70

ஜெர்மனியை வெடிகுண்டுகளைக் கொண்டு தாக்குவது பற்றி நேசதேசத்தலைவர்கள் கூறியுள்ளவை கவனிக்கத் தக்கன.

பிரிட்டிஷ் டிப்புடி பிரதம மந்திரியான மிஸ்டர் அட்லி : "விமானங்களிலிருந்து வெடிகுண்டுகளை வீசி வெகுவாக அச்சு நாடுகளை நாசஞ் செய்தோம்; நமது தாக்குதல் போராட்டத்தில் இது ஒரு மிகச் சிறந்த முறை."

பிரிட்டிஷ் அன்னிய நாட்டு மந்திரியான மிஸ்டர் அந்தோனி ஈடன் : "ஜெர்மன், பாஸிஸ்ட் இராணுவ இயந்திரங்கள் எங்கிருந்தாலும், அவற்றை நாம் வெடிகுண்டுகளால் நாசப்படுத்துவோம்."

பிரிட்டனிலுள்ள அமெரிக்க விமானப் படைத் தலைவரான லெப்டினெண்ட் ஜெனரல் ஈரா. சி. ஈக்கர் : "ஹிட்லர் யுத்த இயந்திரம் தவிடுபொடியாகும்வரை வெடி குண்டுகள் வீசிக்கொண்டிருப்போம்."

இனி வெடிகுண்டுகளை வீசுவதனாலேயே ஜெர்மனியைச் சிதைத்து விடக்கூடுமா என்னும் கேள்வி எழுகிறது. 1943-ம் வருஷம் அமெரிக்கக் காங்கிரசுக்கு சென்ற 1943-ம் வருஷம் மே மாதம் மிஸ்டர் சர்ச்சில் செய்ததோர் பிரசங்கத்தில், "ஜெர்மனியையோ இத்தாலியையோ தொலைக்க வேண்டுமானால், விமான பலம் மட்டும் போதுமா என்பதுபற்றி கருத்து வேற்றுமைகளி லிருந்து கொண்டிருக்கின்றன, மற்ற முறைகளை நாம் கைவிடாதிருக்கும் வரை, இது, கையாளப்படக் கூடிய முயற்சி தான்" என்று கூறினார்.

மூன்று மாதங்களுக்கு முன்பு இது பற்றி, எர் மார்ஷல் ஹாரிஸ் கூறியதாவது : "எதிரி உற்பத்தி ஸ்தானங்களை யெல்லாம் உருவில்லாமல் ஆக்கிவிட வேண்டும்....உள்ள ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்களையும் நாசஞ் செய்து விட முடிவு கட்டி யிருக்கிறோம்."

சென்ற வருஷம் ஜெர்மன் தொழிற்சாலைகளை நாசஞ் செய்யும் வேலை படிப்படியாக அதிகப் பட்டுக் கொண்டு வந்தது. 58 ஜெர்மன் பட்டணங்களுக்கு அதிகமாக நேச நாட்டு வெடி குண்டுகளுக்கு ஆளாயின. அப்படி ஆள்ான பெரியப் பட்டணங்களும் ஒவ்வொன்றும் எத்தனை முறை தாக்கப்பட்டன வென்றும் கீழ்க்கண்ட புள்ளிகள் விளக்கும்.

பெர்லின் ..	46	ப்ராங்க்பர்ட் ..	5
ப்ரெமன்	9	ஹாம்பர்க் ..	13
கொரோன் ..	11	ஹனோவர் ..	7
டெசல்டார்ப் ..	4	கியெல்	6
எம்டென்	7	ஸ்டட்கார்ட் ..	4
எஸ்ஸென் ..	8	வில்லெம்ஷேவன்.	12

இவையனைத்திலும் உலகத்திலேயே மிகவும் தாக்கப்பட்டதாக விளங்குவது, பெர்லின் நகரந்தான். இங்கே மட்டும் 20,000 டன் வெடி குண்டுகள் வீசப்பட்டன. இதற்கடுத்தபடி ஹாம்பர்க். இங்கே 10,000 டன் வெடி குண்டுகள் வீசப் பட்டன. பெர்லினிலுள்ள சுமார் 500 தொழிற்சாலைகளும் தவிடு பொடியாகி விட்டன. அவற்றைப் புதுப்பிக்க பல மாதங்கள் பிடிக்கும். ஜெர்மனியின் மகா பெரிய மின்சாரத் தொழிற்சாலையான சிமென்ஸ் தொழிற்சாலை தான் மகா கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஜெர்மன் நகரத்தை அழிப்பதற்கு 50,000 டன் வெடி குண்டுகள் தேவையென்று தெரிகிறது.

இந்த விமானத் தாக்குதல்களைக் குறித்து "லண்டன் டைம்ஸ்" பத்திரிகை கூறுவதாவது :—

'இந்தத் தாக்குதல்கள் திடீரென்று நடை பெறுகின்றன. எனவே கடுமையான சேதத்தை விளைக்கின்றன. எனினும், நம் சக்திக்குத் தகுந்தபடி வகுத்த திட்டப்படி, வழுவாமல் நிறைவேற்றிக் கொண்டு வரப்படும் ஒரு முறை தான் இது......இந்த முயற்சி வலுக்கவே, அதன் வேலை இரு வகையாயிற்று முதலாவது, நாச வேலை. கடைசியாக ஜெர்மன் யுத்தக் கைத்தொழில்களெல்லாம், அடியோடு நாசப் படுத்தப்பட வேண்டும் அன்றியும் போக்கு வரவுகள் நடைபெற ஒட்டாதபடி தடை செய்து விடவேண்டும். இரண்டாவது, ஜெர்மனியிலேயே யுத்தத்தை நடத்துவது.'

எஸ்ஸென் நகரத்தில் க்ரப்ஸ் தளவாட உற்பத்தித் தொழிற்சாலைகளைச் சேர்ந்த 670 கட்டடங்களுக்கு மேலாகவே, அழிக்கப்பட்டன. கியெல், ப்ரெமென், ஹாம்பர்க், விலெம்ஷேவன் ஆகிய இடங்களிலுள்ள நீர் மூழ்கிக் கப்பல்கள் கட்டு மிடங்களையும் பழுது பார்க்குமிடங்களையும் தாக்கியதனால், அவற்றில் உற்பத்தி வெகுவாகக் குறைந்து விட்டது.

இப்படித் தாக்குவதனால், ஜெர்மன் மக்களின் மனத்தே பயம் தோன்றத் தான் செய்யும். இறுதியில் நமது வெற்றிக்கும் வழி பிறக்கும்.

வானொலி நாட் குறிப்பு

ஜனவரி 29.—சென்னை, மாலை 7-15 : "ஜப்பானிய ஆதரவு."—என். பெஞ்சமின்.

சென்னைக்கு கிரேக்க செஞ்சிலுவைச் சங்க நன்றி.

லண்டன் டபுள்யு 1, பெண்டிங் தெரு, 17-ம் நம்பர் வீட்டிலுள்ள கிரேக்க செஞ்சிலுவை நிர்வாகக் கமிட்டித் தலைவர் டாக்டர் ஏ. எப். காண்டியஸ், ஓ.பி.இ., எம்.டி., எப்.ஆர்.சி.பி. அவர்கள், சென்னை இம்பீரியல் பாங்கி, கிரேக்க மீட்சி வேண்டுகோள் நிதிப் பொருளாளருக்கு எழுதியிருக்கும் கடிதத்தின் மொழி பெயர்ப்பு வருமாறு :—

சென்னை, கிரேக்க மீட்சி வேண்டுகோள் நிதியார் உதவிய 10,000 பவுனையும் லண்டன் இம்பீரியல் பாங்கி மூலம் பெற்றுக் கொண்டதாக நான் கொடுத்திருக்கும் தந்தியை, இதன் மூலம் உறுதிப்படுத்துவதுடன், நமது உயர்ந்த லட்சியத்திற்குத் தாராளமாக உதவிய அன்பர்களுக்கு கிரேக்க செஞ்சிலுவைச் சங்கத்தாரின் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நாம் கடத்திக் கொண்டிருக்கும் இந்தத் துன்பகரமான காலத்தில், நம் போன்ற நாட்டுப் பற்றுடையவர்களின் துன்பங்களைப் பாக்குவதற்கு உதவும், வெகு தூரத்திலும், அருகிலும் உள்ள நம் நண்பர்களின் மகத்தான கூட்டுறவு, மிகுந்த ஊக்கமளிக்கிறது; நமது கடுமையான வேலையைச் செய்து முடிக்க புத்துணர்ச்சியளிக்கிறது. உங்களுடைய அற்புதமான உதவியை கிரேக்கர்கள் ஒரு போதும் மறக்க மாட்டார்கள் என்பது உண்மை.

இத்தாலியில் இந்தியப் படைகளில் தொண்டாற்றும் 'நர்சு'கள்.

யுத்த காலத்தில் அரசாங்க உதவி

கோயமுத்தூர்

"பவானி தாலூகாவில் பல இடங்களிலும், திறக்கப்பட்டுள்ள உணவுப் பொருள் டிப்போக்களில், ஜனங்களுக்கு தேவையான உணவுப் பொருள்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. ஈரோடு தாலூகாவிலிருந்து இந்த தாலூகாவிற்கு 500 மூட்டை கம்பு தருவிக்கப்பட்டது. யுத்தத்திற்குச் சென்றுள்ள குடும்பங்களுக்கு அரிசி போதுமான அளவு கொடுப்பதற்கும் அவர்களுக்கு வேண்டிய உதவி செய்வதற்கும் தனியாக ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இதைக் குறித்து ஆலோசிக்க, தாலூகாவில் ஒவ்வொரு மாதமும் ஒரு கமிட்டி கூடுகின்றது. கோயமுத்தூர் டவுனில் சுமார் 70 சில்லரை வியாபாரிகள் மூலமாய் பங்கீட்டுச் சீட்டின் பேரில், ஒவ்வொரு குடும்பத்திற்கும், போதுமான அளவு அரிசி வழங்கப்பட்டு வருகிறது. கிராமங்களிலுள்ள குடும்பங்களுக்கு கூப்பன் மூலமாய் அரிசி கொடுக்கப்பட்டு வருகிறது. கோயமுத்தூர் டவுனிலுள்ள வியாபாரிகளுக்கு, துவரம்பருப்பு, ஜனங்களுக்குச் சில்லரையில் விற்பதற்காக, கொடுக்கப்பட்டிருக்கிறது. தாராபுரம், உடுமலைபேட்டை, முனிசிபல் எல்லைக்குள் 'அரிசி பங்கீடு முறை' அமுலுக்குக் கொண்டு வருவதற்கு, ஏற்பாடுகள் ஆகிக்கொண்டு வருகின்றன.

கோயமுத்தூர் டவுனில் விறகு சரியான விலைக்கும், எல்லா ஜனங்களுக்கும், கிடைப்பதற்காகவும், விறகு வியாபாரிகள் சங்கம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இனிமேல் மலபார் ஜில்லாவிலிருந்து விறகு கோயமுத்தூர் ஜில்லாவிற்கு மேற்படி சங்கத்தின் மூலமாய்த்தான், கலெக்டர் அனுமதியின் பேரில் கொண்டுவர வேண்டுமென்று உத்திரவு செய்யப்பட்டிருக்கிறது. இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் 81 (2) விதிப்படி, உடைக்காத விறகு 2,240 பவுண்டு உள்ள ஒரு டன் ரூ. 19-ம், உடைத்த விறகு ஒரு டன் ரூ. 21-ம் விலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சில்லரையில் உடைக்காத விறகு ஒரு மனு ரூ. 0-4-0-க்கும், உடைத்த விறகு ரூ. 0-4-6 விலைக்கும் விற்கப்படும்.

"ஸ்டாண்டர்டு கிளாத்" துணி விற்பனை சரிவர நடந்து வருகிறது.

சேலம்

பங்கீட்டு முறை அமுலுக்கு வந்திருப்பதின் காரணமாக சேலம் நகர் எல்லைக்குள்ளிருக்கும் பொது மக்களுக்குக் கஷ்டமின்றி உணவு தானியங்கள் பங்கீடு டிப்போக்கள் மூலியமாக கிடைத்து வருகின்றன.

ஸ்ரீமதி பெட் அம்மையாரின் ஆதரவின் கீழ் ஏழைப் பொது மக்களுக்கு சேலம் கலெக்டர் ஆபீசில் வழக்கம் போல் உணவு அளிக்கப்பட்டு வருகிறது. பொங்கல் பண்டிகையன்று குழந்தைகளுக்கு தின் பண்டங்கள் அளிக்கப்பட்டன.

சேலம் ஜில்லா ராணுவ போர்டாரால் சிப்பாய்களின் குடும்பத்தார்களுக்கு வேண்டிய உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன.

ரெவினியு அதிகாரிகளும், நேசியப் போர்முனை ஊழியர்களும் ஒவ்வொரு கிராமங்களிலும், உணவு தானியங்களை சேமிக்காமலிருக்கும்படியும், அதிக உணவு தானியங்களையும் காய்கறிகளையும் பயிரிடும்படியும் பிரசாரம் செய்வதுடன் சிப்பாய்களின் குடும்பத்தார்களுக்கு வேண்டிய உதவிகளும் புரிந்து வருகிறார்கள்.

ஆத்தூர்

இத்தாலூகாவில் சர்க்கார் தரிசு நிலங்களில் தீர்வையின்றி உணவு தானியங்கள் சாகுபடி செய்ய ரெவினியு அதிகாரிகளால் அநேக குடிகளுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

பெண்ணாகரம்

உணவு தானியங்கள் அறுவடையாகியிருப்பதனால், உணவுப் பொருள்களுக்கு அவ்வளவு கஷ்டம் இல்லை.

தெங்கினிகோட்டை

இந்த சப்-தாலூகாவிலுள்ள தரிசு நிலங்களை சாகுபடிக்கு கொண்டு வருவதற்காக ஒரு ரெவினியு இன்ஸ்பெக்டர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

நாமக்கல்

இவ்வூரிலுள்ள டிப்போ மூலியமாக ஏழைக் குழந்தைகளுக்கு உணவு அளிக்கப்பட்டு வருகிறது.

இத்தாலூகா ராணுவ போர்டார் ஒவ்வொரு மாதமும் கூடி சிப்பாய்களின் குடும்பத்தார்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

(7-ம் பக்கம் தொடர்ச்சி.)

நம் விவசாயிகள் கடமை

நம் விவசாயிகள் தற்சமயம், அறுவடை செய்து வரும், தானியங்களை அவர்கள் உபயோகத்திற்கு வேண்டிய அளவு வைத்துக் கொண்டு, பாக்கி இருப்பதைக் கூடிய சீக்கிரம் விற்று விடுவது மிகவும் நலமாயிருக்கும். முன் வருஷங்களைப் போல் மேற்படி தானியங்களைச் சேமித்து வைத்திருப்பதனால், சௌகரியம் ஏற்படப் போவதில்லை. அதோடு காய்ச்சல் பாடும் பூச்சிகள், எலி, அணில் முதலிய ஜந்துக்களால் சேதம். சேமிக்கும் செலவுகளுமாகிய, பலவித நஷ்டங்கள் ஏற்படும். அரசாங்கத்தார், தானியங்களை வாங்கி, விநியோகம் செய்யும் வேலையை மேற்கொண்டிருப்பதனால், விவசாயிகள் தங்கள் தானியங்களைத் தாமாகவே, தாராளமாக விற்பதற்கு முன் வந்தால், அரசாங்கத்தாரின் முதல் பகுதியான வாங்கும் வேலை, சுலபமாக்கப்பட்டு குறிப்பிட்ட காலத்தில், குறைபாடுள்ள ஜில்லாக்களுக்கு தானிய விநியோகங்கள் நடைபெறும். இது விஷயத்தை முக்கியமாகத் தஞ்சை, திருச்சி, தென்னாற்காடு ஜில்லாக்களிலுள்ள விவசாயிகள் உணர்ந்து, சர்க்காருடன் ஒத்துழைத்து, தாராளமாக அவர்களுடைய தானியங்களை, விற்க முன் வரவேண்டும். 'சோழ நாடு சோறுடைத்து' என்னும் முதுமொழிக்கேற்ப, நம் சோழ நாட்டில் உள்ளவர்கள் தாராளமாக தங்களுக்கு வேண்டிய, உணவுப் பொருள்களைப் பயிர் செய்து கொள்வதும் அல்லாமல், மற்றைய நாடுகளில் உள்ளவர்களுக்கும், உதவும்படி ஏராளமான தானியங்களை உற்பத்தி செய்து வழங்கவும் வேண்டும். இதைத் தான், நாம் எல்லோரும் போற்றி கொண்டாடத் தக்க நம் நாட்டுப் பெருங் காவியமாகிய பெரிய புராணத்தில், சேக்கிழார் சுவாமிகள், நம் நாட்டின் சிறப்பைச் சொல்லும் பொழுது, நம் நாட்டுக்குச் சிறந்த அணிகலனாக விளங்கும், காவிரி நதியை 'செய்ய பூமகட்கு நற்செவிலி போன்றது, வையகம் பல்லுயிர் வளர்த்து, நாள்தொறும், உய்யவே, சுரந்தளித்தூட்டு, நீரது' என்று கூறி இருக்கிறார்கள். அதன்படி காவிரி பாயும், நமது சோழ நாட்டிலிருந்து, மற்றைய நாடுகளுக்கு உணவுப் பொருள் அனுப்ப வேண்டியது, நமது கடமையும், தருமமும் ஆகும். காவிரி நதியைத் தாய்க்கு, ஒப்பிட்டுச் சொல்லி இருப்பதாலும், மற்ற நாடுகளில் உள்ள பல உயிர்களும், காக்கப்படவே, அதன் தண்ணீரானது, உபயோகிக்கப் படுகிறது. என்று கூறி இருப்பதாலும், பண்டைக் காலம் முதலே, நம் நாட்டில் விளையும் தானியங்கள், பல நாடுகளுக்கு அனுப்பப்பட்டு, அந் நாட்டு மக்கள், இனிது வாழ உதவியா இருந்ததென்பது, நன்றாக விளங்குகிறது. ஆகையால், நம் சோழ நாட்டில் உள்ள விவசாயிகள் தங்கள் தேவைக்கு வேண்டிய அளவு போக, பாக்கியுள்ள தானியங்களைப் பிறநாடுகளுக்கு உதவும்படிச் செய்ய வேண்டும்.

மிராசுதார்கள் சங்கங்களுக்கு லைசென்சுகள்

தனிப்பட்ட நபர்கள் தவிர, நெல் விற்பதற்காக அமைக்கப்படும் மிராசுதார்கள் சங்கங்களுக்கு உணவுப் பொருள் கட்டுப்பாடு உத்திரவு பிரகாரம், லைசென்சுகள் கொடுக்கப்படும் என்றும் தெரிகிறது. மேலும் அரசாங்க விவசாயிகளுக்கு, ஆங்காங்குள்ள விவசாய இலாகா உத்தியோகஸ்தர்கள் மூலம், நிலங்களுக்குத் தேவையான உரம், கடலைப் புண்ணாக்கு, கால் நடைகளுக்கு வேண்டிய பருத்தி, இவைகளை அதிகப்படியாயுள்ள பிரதேசங்களிலிருந்து வரவழைத்து, விநியோகம் செய்து வருகிறார்கள். இன்னமும் சாகுபடிக்கு வேண்டிய தளவாடங்களுக்கு, அதாவது மண்வெட்டி, கலப்பை, முதலியவைகளுக்குத் தேவையான, இரும்பை சர்க்காரே, நியாயமான விலைக்கு வாங்கி விவசாயிகளுக்குக் கொடுக்கப் போவதாகவும் சொல்லி இருக்கிறார்கள்.

இந்தியாவிலிருந்து, பர்மா மீது படையெடுப்பு சீக்கிரமாக ஆரம்பமாகி விடுமெனத் தெரிகிறது. அவ்விதம் ஆரம்பித்தவுடன் இப்போதிருக்கும் போக்குவரத்து சாதனங்களில், ரொம்பவும் குறைவு ஏற்பட நேரிடும். ஆகையால் கடற்கரை யோரமாக சிறிய கப்பல்கள் மூலம், உணவுப் பொருள்களை அனுப்பி வைக்கும் திட்டத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும்—(திருச்சி வானொலி நிலையப் பேச்சு).

யுத்த நாட் குறிப்புக்கள்.

பிரிட்டனும் ஜெர்மனியும்.

ஜனவரி 19.—ரஷ்யோ-போலந்து நிலைமையைக் குறித்து பிரிட்டிஷ் அன்னிய நாட்டு மந்திரியான மிஸ்டர் அந்தொனி ஈடன் ஒரு அறிக்கை வெளியிட்டார்.

. எதிர் காலத்தில் சிவில் விமானங்களின் நிலை பற்றி பீவர்ப்ரூக் பிரபு ஒரு அறிக்கை வெளியிட்டார்.

ஜனவரி 20.—கஸ்ரோ துறைமுகத்திற் கருகில் ஒரு பெரிய ஜெர்மன் கப்பல் மூழ்கடிக்கப் பட்டது.

போலந்து முதன் மந்திரியையும் அன்னிய நாட்டு மந்திரியையும் சர்ச்சில் வரவேற்றுப் பேசினர். அப்போது மிஸ்டர் ஈடனும் உட னிருந்தார்.

ஜனவரி 21.—லண்டனையும் இங்கிலாந்திலுள்ள பல பகுதிகளையும் தாக்கிய 8 ஜெர்மன் விமானங்கள் நாசமாக்கப் பட்டன.

ஜனவரி 23.—இரண்டாம் போர் முனைக்கு நியமிக்கப்பட்டிருக்கும் அமெரிக்க வெடி குண்டு விமானப் படைத் தலைவர் லெப்டினென்ட் ஜெனரல் கார்ல் ஸ்ப்ரே இங்கிலாந்துக்கு வந்து சேர்ந்தார்.

ஜனவரி 24.—இந்த யுத்தத்தில் இந்த 1944-ம் வருஷத்தில் தான் பிரிட்டனுக்கு மகா கடுமையானதும் துன்பமானதுமான பருவமாயிருக்கப் போகிற தென்று சர் ஸ்டாபோர்ட் க்ரிப்ஸ் குறிப்பிட்டார்.

ஜனவரி 25.—பொலிவியா அரசாங்கத்தை அங்கீகரிக்க முடியா தென்று காமன்ஸ் சபையில் மிஸ்டர் ஆந்டொனி ஈடன் அறிவித்தார்.

அமெரிக்காவும் அட்லாண்டிக்கும்.

ஜனவரி 19.—யு. என். ஆர். ஆர். ஏ. மசோதாவைக் குறித்த பரிசீலனையை அமெரிக்கப் பிரதிநிதி சபையார் தள்ளி வைத்து விட்டார்கள்.

ஜனவரி 21.—அமெரிக்க மந்திரி சபை இன்று கூடியது.

ஜனவரி 22 — சில வாரங்களுக்கு முன் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடு களுக்குத் தக்க துணை யோடு போய்க் கொண்டிருந்த முக்கியமான கப்பலைத் தாக்க, எதிரி நீர் மூழ்கிகள் முயற்சிக்கவே, அங்கு நடந்த கப்பற் போரின் பயனாகவும் விமானப் போரின் பயனாகவும் ஒரு ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பலாவது மூழ்கி யிருக்க வேண்டும், இரண்டு நாசமாகி யிருக்கலாம் ; மற்றும் பல சேதப்பட்டிருக்கலா மென்று ஒரு அறிக்கை கூறுகிறது.

ஜனவரி 23.—யுத்த அடைக்கல போர்டு ஒன்றை ரூஸ்வெல்ட் ஏற் படுத்தி யிருக்கிறார்.

ஜனவரி 24.—புதிய பொலீவிய ஆட்சியை அங்கீகரிக்க அமெரிக்க அரசாங்கம் மறுத்ததுடன், அங்கிருந்து வந்த அமெரிக்க ஸ்தானீகரையும் திரும்பி வந்து விடும்படி கட்டளை யிட்டிருக்கிறது.

இந்தியா, பர்மா, இலங்கை.

ஜனவரி 20 —யுத்த மந்திரி சபையில் இந்தியப் பிரதிநிதியாக சர் பெரோஸ் கான் நூன் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஜனவரி 21.—கிழக்கிலுள்ள விமானப் படைகள் 19-20-ம் தேதி பாங்காக்கைத் தாக்கியது.

அரகானிலுள்ள சீறெ ரியின் என்னுமிடத்தை நேச தேசப் படை கள் கைப்பற்றிக் கொண்டன.

ஹூகாங் பள்ளத் தாக்கில், அமெரிக்கர்களிடம் பயிற்சி பெற்ற சீனப் படைகள் கடுமையாகப் போராடிக் கொண்டிருக்கின்றன.

ஜனவரி 22.—ரைட் ஆனரபில் மிஸ்டர் சர் ஜி. காசி வங்காள கவர்னர் பதவியை ஏற்றுக் கொண்டார்.

ஆஸ்திரேலியாவில் இந்திய ஹை கமிஷனர் ஒருவரை நியமிப்ப தென்று இந்தியா அரசாங்கத்தினர் முடிவு செய்து விட்டனர்.

ஜனவரி 23.—யு ஆறும், சின்ட்வின் ஆறும் சந்திக்கும் ஜப்பானிய ஸ்தானங்களை நேசதேச விமானப் படைகள் நாசஞ் செய்து தவிடு பொடி யாக்கி விட்டன.

மௌங்டாங்குக்கு அருகிலுள்ள ஒரு கிராமம் கைப்பற்றப் பட்டது.

மோகாங், ப்ரோம், பெகு, மியிங்யான் ஆகிய ஊர்கள் வெடி குண்டு களால் தாக்குண்டன.

ஜனவரி 24.—மேன்மை தங்கிய வைசிராய் பிரபு பம்பாயிலுள்ள தானியக் கடைகளைப் பார்வை யிட்டார்.

மிங்குகாவையும், ஜாரோவிலுமுள்ள எதிரியின் முக்கியமான ஸ்தான மொன்றையும் சீனப் படைகள் கைப்பற்றின.

ஜனவரி '5.—தென்கிழக் காசியப் படைக் கூட்டத் தலைவராக ஜென ரல் சர் ஜார்ஜ் கிப்பர்டும், 14-வது படையின் தலைவராக ஜெனரல் டபுள்யு. ஜே. ஸ்லிம்மும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

ரஷ்யாவும் பின்லந்தும்.

ஜனவரி 19.—க்ராஸ்னோயே சாலோ, பீட்டர்ஹாப், ரோப்ஷா. ஷுபினோ ஆகிய ஊர்களை சோவியத் படைகள் கைப் பற்றின.

சென்ற 2 மாதங்களில் 5½ லட்சம் ஜெர்மானியர்கள் கொல்லப்பட்ட தாகச் சொல்லப்படுகிறது.

ஜனவரி 20.—ஐந்து முக்கியமான ரயில்வேக்கள் சந்திக்கும் ஒரு முக்கியமான பட்டணமான நோவ்கராடை ரஷ்யர்கள் கைப்பற்றிக் கொண்டனர்.

ரோவ்னோவை நோக்கி ஜெனரல் வெடுடினுடைய படைகள் வெகு விரைவாக முன்னேறிக் கொண்டிருக்கின்றன.

ஜனவரி 21.—ஸ்டாலின்கிராட் போர் முனையில் மிகா என்னு மிடத்தை செம்படைகள் கைப்பற்றிக் கொண்டன.

ஜனவரி 22.—பிரிபெட் போர் முனையிலுள்ள ரஷ்யப் பிரிவுப் படை கள் விஷா ஆற்றைப் பல விடங்களிற் கடந்து விட்டன.

கிரிமியாவைச் சேர்ந்த கெர்ச்சின் தென் மேற்குப் பகுதியிற் சோவியத் படைகள் இறங்கி விட்டன.

ஜனவரி 23.—லெனின்கிராடைச் சுற்றி 20 மைல் தூரத்திற்குள் ஜெர்மானியர்கள் அமைத்திருந்த அரண்களெல்லாம் சிதைந்து கொண்டு வருகின்றன.

டோஸ்னோவின் எல்லைப்புரத்தில் செம்படைகள் வளைந்து கொண் டிருக்கின்றன.

ஜனவரி 24.—புஷ்கின், பாப்லோஸ்க், ஸ்லட்ஸக் ஆகிய இடங்களை செம்படைகள் கைப்பற்றி, கட்சிங்கா-நார்வா ரெயில்வே லைனை வெட்டி விட்டன. சுடோவோவுக்கு 4 மைல் தூரத்தில் ரஷ்யப் படைகள் இப்போ திருக்கின்றன.

ஜனவரி 25.—கட்சினாவை ரஷ்யத் துருப்புகள் வளைத்துக் கொண் டிருக்கின்றன.

இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்தியதரைக் கடல் பகுதி.

ஜனவரி 19.—5-வது படையைச் சேர்ந்த பிரிட்டிஷ் பட்டாளங்கள் காரிக்லியோ ஆற்றைப் பல விடங்களில் கடந்து விட்டனர்.

8-ம் படைப் போர் முனையில் கனடியப் படைகள் தம் பழைய இடங்க ளுக்குப் பின் வாங்கிக் கொண்டன.

ஜனவரி 20.—மின்டுர்னோ என்னுமிடத்தை நேசதேசப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

ஜனவரி 21.—இத்தாலியின் மேற்குக் கரையிலுள்ள நெட்டுனோ வுக்கும் ஆற்று முகத்துவாரத்திற்கும் இடையில் 5-ம் படையைச் சேர்ந்த பிரிட்டிஷ் பட்டாளமும் அமெரிக்கப் பட்டாளமும் இறங்கி விட்டன.

ஜனவரி 22.—ரோமாபுரிக்குத் தெற்கே 32 மைல் தூரத்திலுள்ள நெட்டுனோ வென்னும் ஊரை நேச தேசப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

ரோமாபுரியிலுள்ள எல்லா விமானக் கூடங்களும் அழிக்கப்பட்டன.

ஜனவரி 24.—எட்டாம் படைப் போர் முனையில் ரோந்துப் படைகள் கடுமையாக வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன.

ஜனவரி 25.—அப்பியன் பெருவழியை யடுத்து நேசநாட்டுப் படை கள் நெருங்கிக் கொண்டிருக்கின்றன. அன்சியோ துறைமுகம் நேச தேசப்படைகள் கையிலிருக்கிறது.

விஷி, சுயேச்சை பிரான்சு, எதிரிகள் வயப்பட்ட நாடுகள்.

ஜனவரி 19.—லெபனான் சுயேச்சை பரிபூரணமானதா யிருக்கு மென்று அந்நாட்டின் முதன் மந்திரி கூறினார்.

ஜனவரி 21.—வட பிரான்சிலுள்ள குறிப்பான இடங்களை நேசநாட்டு வெடி குண்டு விமானங்கள் தாக்கின.

ஜனவரி 23.—யூகோஸ்லேவியாவில் கடுமையான போராட்டம் நடை பெறுகிறது.

ஜனவரி 25.—மத்தியானம் சோபியா நகரத்தை அமெரிக்க விமா னங்கள் தாக்கின.

கீழக் கோடி நாடுகள்

ஜனவரி 19.—நியூ பிரிட்டனைச் சேர்ந்த அரவி பகுதியில் ஜப்பானி யர் நாட்டிற்குள்ளாக அமெரிக்கப் படைகள் 1000 கெஜ தூரம் முன்னேறி யிருக்கிறார்கள்.

நேச நாட்டு வெடி குண்டு விமானப் படை, அம்பாய்னாவைத் தாக்கி யது; 9000 டன் ஜப்பானியக் கப்பலொன்றிற் குத் தீ மூட்டிற்று; ஜப்பானிய சப்ளை தளமான ஹன்சா விரிகுடாவையும் வெடிகுண்டுகளால் தாக்கியது.

ஜனவரி 20.—ரபாலில் 3 ஜப்பானிய வியாபாரக் கப்பல்கள் மூழ் கடிக்கப்பட்டன ; 2 நாசமாக்கப்பட்டன; 21 ஜப்பான் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

நியூகினியின் வட பகுதியில் ஜப்பானியரின் எதிர்ப்பு குலைந்து விடலா மென்றும், தென் மேற்குப் பசிபிக் போர் முனையில், நேசதேசப் படைகள் படிப்படியாக முன்னேறிக் கொண்டிருக்கிறார்களென்றும் அமெரிக்க யுத்த மந்திரி மிஸ்டர் ஹென்ரி எல். ஸ்டிம்சன் கூறினார்.

ஜனவரி 21.—மலாக்கா ஜலசந்தியின் வட வாயிலில், ஒரு ஜப்பா னிய க்ரூய்சர் கப்பலையும், 3 பெரிய சப்ளை கப்பல்களையும் ஒரு பிரிட்டிஷ் நீர்மூழ்கிக் கப்பல் மூழ்கடித்தது. பசிபிக் மகா சமுத்திரத்திலும் கீழக் கோடிப் போர் முனையிலும் அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல்கள் மேலும் 12 ஜப்பானியக் கப்பல்களை மூழ்கடித்தன.

யுத்தத்தைக் குறித்து ஜப்பானிய முதன் மந்திரி ஒரு அறிக்கை விடுத்தார்.

அலூஷியன் தீவுகளிலிருக்கும் வெடி குண்டு விமானங்கள் பரமுஷிரு தீவைத் தாக்கின.

ஜனவரி 22.—அம்பாய்னா, மடாங், ராமு பள்ளத்தாக்கு, ஹன்சா விரிகுடா, எம்பரெஸ் அகஸ்டா விரிகுடா, போகெய்ன்வில் முதலிய வற்றை நேசநாட்டு விமானங்கள் தாக்கின.

21-ம் தேதி முடிவு செய்யப்பட்ட ஆஸ்திரேலியா-நியூசிலந்து ஒப்பந் தம் இன்று பிரசுரமானது.

ஜனவரி 23.—தென் பசிபிக் நாடுகளுக்கு டிரஸ்டி ஏற்படுத்த வேண்டு மென்று நியூசிலந்தில் அமெரிக்க மந்திரியா யுள்ள மிஸ்டர் வால்டர் நாஷ் கூறியிருக்கிறார்.

டோக்கியோவுக்கு 1800 மைல்களுக்கப்பாலுள்ள ஜப்பானியர்களின் முக்கியமான கப்பல் தளமும் விமான தளமுமான பரமுஷிரோ இரண்டாம் முறையாகத் தாக்குண்டது.

ஹாங்காங்கையும் மார்ஷல் தீவுகளையும் அமெரிக்க விமானங்கள் தாக்கின.

ஜனவரி 24.—ஜப்பானிய அன்னிய நாட்டு மந்திரியுடன் டோக்கியோ விலுள்ள ஜெர்மன் ஸ்தானீகர் 1 மணி நேரம் சர்வதேச நிலைமை பற்றி கலந்து பேசினார்.

நியூகினியில் பேரியா ஆற்றின் மேல் பகுதியிலுள்ள பதுங்கு மிடங் களிலிருந்த ஜப்பானியர்களை ஆஸ்திரேலியப் படைகள் விரட்டி விட்டன.

நான்கிங் அரசாங்க முதன் மந்திரியான வாங் சிங் வெய் என்பவரைக் கொலை செய்ய முயன்ற 6 பேர்களை உடனே கைது செய்து, கொன்று விட்டார்கள்.

தூரக் கிழக்கு நாடுகள்.

ஜனவரி 25.—நியூ கினியைச் சேர்ந்த பினிஸ்டரி மலையில், இடுக்கி யாகப் பிரிந்த ஆஸ்திரேலியப் படைகள் நெருங்கி, 300 கஜ தூரத்திற்குள் வந்துவிட்டன.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.